
# தமிழ்ச்சாரல்




## சித்திரை சிறப்பிதழ் 2023

Scanned with CamScanner



## திருக்குறளின் அதிசயங்கள்

- ✓ திருக்குறளில் தமிழ், என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை,
- ✓ திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
- ✓ திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247 - ல் 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்
- ✓ திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை - குன்றிமணி
- ✓ திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- ✓ திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்
- ✓ திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து - னி (1705)
- ✓ திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ , ங
- ✓ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது
- ✓ திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது
- ✓ திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்

Scanned with CamScanner

# பொருளடக்கம்


*தலைவர் உரை...... 2*

*ஆசிரியர் பக்கம்...... 3*

*சித்திரைத் திருவிழா மஹோத்சவம்...... 6*

*அ.முத்துலிங்கத்தின் உலகம் ...... 9*

*பாப்பையா ரசிகன் To ரஜினி மாமனார்...... 12*

*கவிதைகள் ...... 14*

*சம்போ.. சிவ சம்போ .. சிவ சம்போ...... 20*

*சோதிடம் ...... 23*

*வாசிப்பை நேசிப்போம் ...... 26*

*வள்ளுவம்: அறமா, கல்வியா?!...... 31*

*சிறுகதை...... 33*

*குருவே சரணம் ...... 34*

*உணவே மருந்து...... 35*

*புலம் பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப் பணிகள் ...... 37*

*என் கேள்விக்கு என்ன பதில்?...... 40*

*சமையல்...... 43*

*சித்திரக்கூடம் ...... 47*

*பாரதி கலை மன்ற தமிழ்ப்பள்ளிகள்...... 54*

*கோலங்கள்...... 55*

*பாரதி கலை மன்ற நிகழ்வுகள் ...... 56*




அட்டைப்படத்தை வரைந்தவர்
அர்ச்சனா ஆனந்த்

அட்டைப்பட வடிவமைப்பு
அதிதி நம்பி





Scanned with CamScanner

# தலைவர் உரை

அன்பார்ந்த பாரதி கலை மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.



அமெரிக்க மண்ணில் வாழும் நமக்கு, நம் தமிழ் கலை, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றுடன் ஒரு நெருங்கிய பிணைப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே ஹூஸ்டன் மாநகரில், பாரதி கலை மன்றம் தோன்றியது. அத்தகைய சிறப்பான அமைப்பில், 49வது தலைவராக பதவியேற்கவும், அதன் சீரிய நோக்கத்தின் பயணத்தில் அங்கம் வகிக்கவும் காரணமான பாரதி கலை மன்ற உறுப்பினர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சிறந்த தலைமைப் பண்புகளோடு இந்த அமைப்பை வடிவமைத்துக் கொடுத்தவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். பாரதி கலை மன்றமானது 1974 இல் நிறுவப்பட்டது. நம் தாய் மொழி தமிழையும், நமது கலாச்சார விழிப்புணர்வை வளர்ப்பதற்கும், நமது வருங்கால சந்ததியினர் நமது வேர்களுடன் தொடர்பில் இருப்பதை உறுதி செய்வதற்கும் இந்த மன்றம் நல்ல பல உள்ளங்களின் அர்ப்பணிப்பால் நிறுவப்பட்டது.

பல்வேறு கலை, இலக்கிய கலாச்சார நிகழ்ச்சிகளின் வழியாக நம் தமிழ் மக்களிடையே உள்ள தனித்திறமைகளையும், சமூகத் திறமைகளையும் வெளிக்கொணர்ந்து,பாரதி கலை மன்றத்தின் இலக்குகளையும் மரபுகளையும் தொடர நான் உறுதிபூண்டுள்ளேன். தமிழ்ப்பள்ளி சமூகத்திற்கு எனது முழு ஆதரவையும் வழங்க விரும்புகிறேன், மேலும் நமது தமிழ் மொழியை எதிர்கால சந்ததியினருக்கு புகுத்துவதில் அவர்களின் கடின உழைப்பை நான் பாராட்டுகிறேன். பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரையில் அனைவரும் நமது பாரம்பரிய கலைகள் வழியாக தம் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆண்டு முழுவதும் மேடையேற நல்ல வாய்ப்புகளை வழங்க நாங்கள் காத்திருக்கிறோம். ஹூஸ்டனில் இருக்கும் நமது தமிழ் உள்ளங்களை ஒன்று திரட்டி, நமது மன்ற குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதையும், அவர்களுக்கு இன்னும் பல தரமான நிகழ்வுகளை அள்ளித் தருவதையும் நோக்கமாக கொண்டுள்ளோம்.

எங்களது அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் தங்கள் அனைவரின் பேராதரவினை அளித்து எங்களை உற்சாகப்படுத்தியதற்கு நன்றிகள் பல. இவ்வாண்டு என்னோடு அணி சேர்ந்து, எனக்கு பக்கபலமாக உள்ள செயற்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பால் மட்டுமே இவை அனைத்தும் சிறப்பாக நடத்த சாத்தியமானது. அவர்கள் அனைவருக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன். பாரதி கலை மன்றத்தால் நடத்தப்படும் தமிழ்ப்பள்ளிகளில் சிறந்த முறையில் பணியாற்றி, நமது மொழியினை அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்லும் தமிழ்ப்பள்ளிகளின் இயக்குனருக்கும், ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரிய பெருமக்களுக்கும் எங்கள் குழுவின் சார்பில் நன்றிகளும் பாராட்டுக்களும்.

பாரதி கலை மன்றத்தின் பணி சிறக்க, எங்களை எப்பொழுதும் முழு ஈடுபாட்டுடன் ஊக்குவித்து, உதவிக்கரம் நீட்டும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். உங்களின் ஆதரவு இல்லாமல் எங்களால் இவ்வளவு தூரம் பயணித்து இருக்க இயலாது என்பதினையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். என் மேல் நம்பிக்கை வைத்து, எனக்கு இந்த பொறுப்பினை அளித்து ஊக்குவித்தமைக்கு நன்றிகள் பல. நமது சமூகத்திற்கு நல்ல பல நிகழ்வுகளை வழங்கவும், பாராட்டிற்கும் பண்பிற்கும் உரிய பாரதி கலை மன்றத்தின் வாயிலாக சமூகத்திற்காக செயல்பட கிடைத்த இந்த வாய்ப்பிற்காக நானும் எனது குழுவும் மகிழ்ச்சியடைகிறோம்.

பாரதி கலை மன்றத்தின் வெற்றிகரமான இந்த 49ஆம் ஆண்டினை அனைத்து தமிழ் உறவுகளுடன் கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சி. மேலும் ஹூஸ்டன் மாநகரில் வாழும் தமிழ் உறவுகளை பாரதி கலை மன்றக் குடும்பத்தின் ஒரு பகுதியாக இணைய வருமாறு உங்களையும் உங்கள் உறவுகளையும் அன்புடன் அழைக்கிறேன்.

நன்றி
அன்புடன்
கங்காமலர் சிவப்பிரகாசு



Scanned with CamScanner

# ஆசிரியர் பக்கம்





அன்பார்ந்த பாரதி கலை மன்ற தமிழ் உறவுகளுக்கு வணக்கம்!

அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!

2023 ஆம் ஆண்டின் முதல் இதழானது பாரதி கலை மன்றத்தின் 49வது ஆண்டு மலரின் சிறப்பிதழாகவும், சித்திரை திருவிழாவின் சிறப்பிதழாகவும் வெளி வருகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக பாரதி கலை மன்றத்தின் சார்பில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய கட்டுரைகள், ஹூஸ்டன் தமிழ் மக்கள் மற்றும் அனைத்து தமிழ் மக்களின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் பாரதி கலை மன்ற தமிழ்ப் பள்ளிகளின் குழந்தைகளின் படைப்புகளையும் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த இதழில் வெளியாகி இருக்கும் அனைத்து படைப்புகளும் உங்களின் மனதை கவரும் என்று நம்புகின்றோம். இந்த இதழ் சிறப்புடன் வெளியாக தங்கள் படைப்புகளை அனுப்பி ஒத்துழைத்த அனைத்து படைப்பாளிகளுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் அனைத்து தமிழ்ப்பள்ளி இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மிக்க நன்றி. பாரதி கலை மன்ற செயற்குழுவினருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

தமிழ்ச் சாரலின் படைப்புகளுக்கு உங்களது கருத்துகளையும் பாராட்டுகளையும் எங்களுக்கு மறவாமல் literarydirector@bkmhouston.org மற்றும் jointliterarydirector@bkmhouston.org என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கவும். வாசகர்களின் கருத்துகளை தமிழ்ச்சாரலின் அடுத்த இதழில் வெளியிட உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

கௌசல்யாதேவி நம்பி
இலக்கிய இயக்குனர்

ராஜி வாஞ்சி
இணை இலக்கிய இயக்குனர்

**தமிழ்ச்சாரல் இலக்கியக்குழு - 2023**

**பொறுப்புத் துறப்பு**

**எழுத்துப்பிழை மற்றும் அச்சுப்பிழை இருந்தால் தயவுகூர்ந்து மன்னிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**



Scanned with CamScanner

# செயற்குழு - 2023



கங்காமலர் சிவப்பிரகாசு
தலைவர்



விஜி திரு
துணைத்தலைவர்



சுபா கண்ணன்
செயலாளர்



அனிதா குமரன்
பொருளாளர்



சௌம்யா கணேஷ்ராம்
தகவல் தொடர்பு
இயக்குனர்



கௌசல்யாதேவி நம்பி
இலக்கிய இயக்குனர்



உஷா வாசு
இணை செயலாளர்



தேவி பிரபாகரன்
இணை பொருளாளர்



தங்கராஜ் பேச்சியப்பன்
இணை தகவல் தொடர்பு
இயக்குனர்



ராஜி வாஞ்சி
இணை இலக்கிய
இயக்குனர்



சவிதா வித்யபிரகாஷ்
இயக்குனர் - 1



பாலா பாலசந்திரன்
இயக்குனர் - 2



ஸ்ரீவித்யா ஸ்ரீதர்
முன்னாள் தலைவர்



ஸ்ரீதேவி சுப்பிரமணியன்
தமிழ்ப்பள்ளி இயக்குனர்



Scanned with CamScanner










Scanned with CamScanner

# சித்திரைத் திருவிழா மஹோத்சவம்

## பியர்லேண்ட் மீனாட்சித் திருக்கோவில்



பியர்லாண்ட் மீனாட்சி திருக்கோவிலின் சித்திரைத் திருவிழா மஹோத்சவம் 2023 ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி த்வஜரோகணத்துடன் (கொடியேற்றம்) துவங்குகிறது. அந்த நாளிலிருந்து தொடங்கும் 10நாட்கள்சித்திரை மஹோத்சவ திருவிழாவின் ஆனந்தத் தருணங்கள்.

இவ்விழா இந்தியாவில் அருள்மிகு மீனாட்சி ஆட்சி புரியும் மதுரையில் வெகு சிறப்பாக நடைபெறும். அதே போன்றே எட்டாயிரம் மைல்களுக்கு அப்பால் கடல் கடந்து கண்டம் கடந்து அருள்மிகு மீனாட்சி வசிக்கும் நமது பியர்லாண்ட் திருக்கோவிலும் ஒவ்வொரு நாளும் விழா சிறப்பாக நடைபெறும்.

தினமும் காலையும், மாலையும் யாகசாலை பூஜை நடைபெறும். ஒவ்வொரு நாளின் பூஜையின் முடிவில் உற்சவ மூர்த்திகள் வெவ்வேறு விதமான வாகனங்களில் கோவிலைச் சுற்றி ஊர்வலம் வருவது கண் கொள்ளாத காட்சியாக இருக்கும். காலை மாலை இரு வேளையும் நேரடியாக நாதஸ்வரம், தவில் கலைஞர்களின் மங்களகரமான இசையோடு நடைபெறும் நிகழ்ச்சிகள் பக்தர்களை மெய் மறக்கச் செய்யும்.

இது மட்டுமா... ஒவ்வொரு நாளும் மாலையில் பாட்டு, நடனம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகள் களை கட்டும். இது குழந்தைகள் முதல் பெரியோர் வரை நம் சமூகத்தில் இருக்கும் நண்பர்கள் தனது கலைத்திறமைகளை வெளிப்படுத்தவும், ஆன்மீகச் சிந்தனைகளை பகிரவும் ஏதுவாக மேடை அமைக்கப்படும்.

சித்திரைத் மஹோத்சவத்தின் இரண்டாம் நாள் மீனாட்சி பட்டாபிஷேகம் இவ்வருடம் 2023 ஏப்ரல் 29 ஆம் தேதி நடைபெறும். பட்டாபிஷேகம் அன்று கோவில் அர்ச்சகரிடமிருந்து இரத்தினச் செங்கோலை நமது திருக்கோவிலின் தலைநிர்வாகி பெற்று, அம்மனை வலம் வந்து அன்னை மீனாட்சியிடம் கோலை ஒப்படைப்பது முக்கிய நிகழ்வாகும். வைரக்கிரீடம் பூண்டு செங்கோலுடன் விதவிதமான மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூப்பல்லக்கில் கருணையே



Scanned with CamScanner

உருவான அன்னை மீனாட்சி மேள தாளம் முழங்க பக்தர்களின் ஆனந்த திருக்கோஷத்துடன் கோவிலை வலம் வருவதைக் காண கண் கோடி போதாது.

திருவிழாவின் நிறைவாக மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருக்கல்யாணம் இந்த ஆண்டு 2023 மே 7 ஆம் தேதி நடைபெற உள்ளது. அந்நாளன்று காலை பிரசன்ன கணபதி சன்னதியில் இருந்து சீர் வரிசையோடு வாத்திய கோஷம் முழங்க பக்தர்களின் பக்தி கோஷத்துடன் கோவிலை வலம் வந்து நமது பிரமாண்டமான கல்யாண மண்டபத்தில் திருக்கல்யாணம் சங்கல்பம், விக்னேஷ்வர பூஜையோடு துவங்கி கல்யாண உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறும்.

மகா தீபராதனை முடிந்து உற்சவ மூர்த்திகள் அனைவரும் அலங்கரிக்கப்பட்ட பல்வேறு வாகனங்களில் வெள்ளித்தேரில் ரத ஊர்வலம் வந்து த்வஜ அவரோகணத்துடன் (கொடி இறக்கம்) 10 நாள் சித்திரைத் திருவிழா இனிதாக நிறைவடையும்.

இவ்விழாவிற்கு உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வர். நமது ஊர் வழக்கப்படி, "போஜனம் செய்ய வாருங்கள் .. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கல்யாண மண்டபத்தில் போஜனம் செய்ய வாருங்கள்" என்று பாட்டுப் பாடி அனைவரையும் அழைப்பார்கள். இப்பாடல் வரிகளிலேயே திருக்கல்யாணத்திற்கு யார் யார் வந்திருந்தார்கள், எப்படி விமரிசையாக கல்யாணம் நடந்தது, என்னன்ன வகையான உணவு பதார்த்தங்கள் பரிமாறப்படும் என்று அறிவித்து தலைவாழை போட்டு பக்குவமாக பரிமாறி சமபந்தி விருந்தாக அனைவரும் ஒன்றாக உணவருந்தி மகிழ்ந்து குலாவி இவ்விழா செவ்வனே நிறைவடையும்.



இந்நிகழ்சியினை எழுத்திலும் வார்த்தைகளிலும் சொல்வதை விட, நேரில் கண்டு திருவிழாவில் பங்கு கொண்டு அன்னை மீனாட்சியின் ஆசி பெற எல்லோரும் சித்திரைத் திருவிழாவிற்கு வாருங்கள்.


ஹேமலதா வெங்கடாசலம்



தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும்
தளர்வு அறியா
மனம் தரும்
தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும்
நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும்
பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே!!



Scanned with CamScanner






Scanned with CamScanner

# அ.முத்துலிங்கத்தின் உலகம்



அ.முத்துலிங்கத்தின் எழுத்தை எனக்கு ஜெயமோகன்தான் அறிமுகப்படுத்தி வைத்தார்.அவருடைய ' பூமியின் பாதி வயது' நூலைப்பற்றி ஜெ ஒரு கட்டுரையில் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையின் சாராம்சம் இதுதான்- ஜெ அந்தப் புத்தகத்தை வாங்குகிறார். ஆ.ஃபீஸிற்கு கொண்டு போகிறார். ஜெயமோகன் புத்தகத்தை வைத்திருந்ததைப் பார்த்த அலுவலக நண்பர் ஒருவர் வாங்கிக்கொண்டு போய் , அலுவலக நேரத்தில் கூட விடாமல் படித்துக் கொண்டே இருக்கிறார். . இத்தனைக்கும் அந்த நண்பர் தீவிர இலக்கிய வாசகரோ அறிவு ஜீவிக்கொம்பொன்று முளைத்தவரோ அல்ல. ஒரு வழியாக புத்தகத்தை அவர் திருப்பிக் கொடுத்தவுடன் ஜெ அதனை வீட்டிற்கு எடுத்து வருகிறார். கடுமையான அலுவலகப் பணி, வீட்டு வேலைகள், குழத்தைக் காரியங்களுக்கு மத்தியில் மேஜை விளக்கை போட்டுக் கொண்டு அருண்மொழிநங்கை இரவெல்லாம் அ. முத்துலிங்கத்தைப் படிக்கிறார். அருண்மொழிநங்கை ஒரு தீவிர இலக்கிய வாசகர் எனினும் பல வேலைகளுக்கு மத்தியில், படிக்க நேரம் ஒதுக்க முடியாத வாழ்க்கைக் கட்டத்தில் அப்போது இருந்தார். அவரும் இரவெல்லாம் படித்து புத்தகத்தை முடித்தார். முத்துலிங்கத்தின் எழுத்தில் அப்படி என்ன இருக்கிறது? இவ்வளவு விரிந்த வாசகர் வட்டம் அவருக்கு எப்படி அமைந்தது? ஏனெனில் அவரது எழுத்து எல்லா மனங்களிலும் போய் உறைந்து நிற்கும், உலுக்கும் மர்மம் கொண்டது - என்கிறார் ஜெயமோகன்.

இதைப் படித்த பிறகு தான் நான்,' யார்டா சாமி இந்த முத்துலிங்கம் ? 'என யோசித்தேன். வழக்கமாக கவிதா பதிப்பகத்தை அழைத்துத்தான் புது எழுத்தாளர்களை பற்றி அறிவேன். கவிதா பதிப்பகம் சேது. சொக்கலிங்கம் எல்லாரையும் பற்றி உயர்வாக சொல்லும் பண்பாளர். உயர்வாகச் சொல்ல ஒன்றுமில்லையெனின், 'ஆமா, எழுதறாரில்ல..' என்று ஆச்சரியப்படுவார். எப்போதும் அணுகுவது போல் ஒரு தொலை பேசி அழைப்பில் சேது. சொக்கலிங்கம் அவர்களிடம் கேட்டேன். ' சார், யாரு இந்த அ. முத்துலிங்கம்?'.' ரொம்ப ரொம்ப பெரிய எழுத்தாளர்மா 'என்றார் திரு. சொக்கலிங்கம். ஒரு குழந்தை இரண்டு கையையும் விரித்துக்கொண்டு, ' ரொம்பப் பெரிசு, வானம் அளவு' - என்று சொல்லும் ஒரு பாவனை எனக்கு தொலைபேசி வழியாகவே தெரிந்தது. ' சரி, அந்த 'பூமியின் பாதி வயது' புத்தகத்தை கொஞ்சம் எங்கியாவது வாங்கி அனுப்புங்க சார் ' என்றேன். அவர் அடுத்த ஒரு மணி நேரத்தில்

அனுப்பியதை நான் இரவெல்லாம் படித்து (' பேய் மாதிரி ராத்திரியெல்லாம் விளக்கப் போட்டு படிச்சு,தானும் தூங்காம, நம்மையும் விழிக்க வைப்பா- என் கணவர் முனகுவது கேட்டாலும் படித்து முடித்தேன். எந்தப் பேயாவது இரவு விளக்கைப் போட்டு முத்துலிங்கத்தைப் படிக்குமா?) .அடுத்த நாளே புத்தகத்தை முடித்தும் விட்டேன். முத்துலிங்கம் என் நெருங்கிய நண்பராகி விட்டார்- நேரில் பார்க்காமலும் பேசாமலும் தான்!

அவர் வாழ்க்கையை வேறு வேறு கோணங்களில் பார்க்கிறவர். இலங்கையின் கொக்குவில்லில் தெருவுக்கு நடுவே போடப்பட்டிருக்கும் கிணறோ, சூடானில் உள்ள கெசீரா நீர் வளத்துரையின் அலுவலகமோ- அவரின் எழுத்தால் நம் கண் முன்னே காட்சியாக விரிந்து விடும். நாமே அங்கு போய்



Scanned with CamScanner

நேரே பார்த்தால் மனதில் பதிவதை விட அவர் எழுத்தால் பதிவது இன்னும் தெளிவான காட்சியாகக் கருத்தில் நிற்கும். அவரின் எல்லா கதைகளிலும் அவர் பார்வையாளர் மட்டுமே.கருத்துச் சொல்ல மாட்டார், தீர்ப்பு வழங்குதல் அவரிடம் இருக்காது.வித்தியாசமான அக அடுக்குகளில் நம்மை பயணம் செய்ய வைப்பார். யாரோ ஆ்ஃப்கானிஸ்தான்காரனைப் பற்றிய கதையாக இருக்கும் ஒரு சம்பவம், திடீரென்று நாமே பங்கு பெறும் காட்சியாக மனத்தில் பதியும் அந்த அற்புதத் தருணம் தான் முத்துலிங்கத்தின் மாஜிக்!

பல்லாண்டுகள் பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றிய எனக்கு, அது போன்ற நிறுவனங்களின் அக மற்றும் புறச் சூழல்களைப் பற்றிய நம் எழுத்தாளர்களின் கதைகள் மிகுந்த மனச் சோர்வையே அளிக்கும். நம்ம வாத்தியார் சுஜாதா உட்பட (அவர் அரசு நிறுவனத்தில் பணியாற்றியதாலோ என்னவோ) MNC கலாச்சாரத்தையும் வேலைச் சவால்களையும் யாருமே சரியா சொல்லவில்லையே என்ற குறை எனக்கு. கதைகளாவது பரவாயில்லை- சினிமாக்கள் இன்னும் பயங்கரம்! 'கார்பரேட் கம்பனிகள் விவசாயிகளின் ரத்தத்தை உறிஞ்சுகின்றன' என்று நரம்பு புடைக்க பேசும் கதாநாயகனிடம் போய்- 'சார், கார்பரேட் என்றாலும் கம்பெனி என்றாலும் ஒன்றுதான் சார். ஒண்ணா கார்பரேட்ன்னு சொல்லுங்க, இல்ல கம்பெனின்னு சொல்லுங்க..' என்று போய்ச் சொல்ல எனக்கு வாய் துடிக்கும். கஜினி படத்தில் செல் கம்பனி CEO விளம்பரத் தட்டி வைக்க இடம் தேடி தானே கதாநாயகி வீட்டுக்கு வருவதெல்லாம் 'கும்பி பாகம்' ரேஞ்சுக்கு கொடுமை மக்களே.. ஈங்கிதனால் யானும் இடர் மிகுந்து வாடுகையில் எங்கிருந்தோ வந்தார் முத்துலிங்கம். ஈங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம் .. என்று நாங்களெல்லம் இறும்பூது (அப்படியென்றால் என்ன?') எய்தும்படி அமைந்தன அவரின் கதைகள்.

'திகட சக்கரம்' கதையில் ஒரு கமிட்டியின் முன் நாயகனும் அவனது ஸ்வீடன் நண்பனும் ஒரு பிரசன்டேஷனை சமர்பிக்க வேண்டும். கட்டப்பட இருக்கும் அணைக்கட்டினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட இருக்கிறது என்று அந்த அறிக்கையில் இவர்கள் நிரூபிக்க வேண்டும். அறிக்கையின் ஆரம்பத்திலேயே ஒரு எண்ணை தாங்கள் தவறாகப் போட்டு விட்டோம் என்று நாயகன் ஒத்துக் கொண்டு விடுகிறான். ஒரே கூச்சலும் குழப்பமுமாக மீட்டிங் போகிறது. அந்தப் பிரச்சனை தீர்ந்ததும் வேறு பிரச்சனைகளை யாருக்கும் எழுப்பத் தோன்றாமல்போகவே, இவர்களின் ப்ரோபோசல் ஏற்கப்படுகிறது. இதை எத்தனை முறை நாங்கள் அலுவலகத்தில் செய்திருப்போம்! ஆடிட் நடக்கும் போது நாங்களே சில தவறுகளை ஆடிட்டர்கள் கண்ணில் படும்படி விட்டு வைப்போம்.அதைக் கண்டுபிடித்து அதிலேயே அவர்கள் மகிழ்ந்து , அலமாரிகளில் மறைத்து வைத்துள்ள எலும்புக்கூடுகளை கண்டுபிடிக்காமலேயே போய் விடுவார்கள். முத்துலிங்கம் இதை 'கச்சியப்பர் ஸ்ட்ராடஜி' என்கிறார்.கந்த புராணம் எழுதிய கச்சியப்பர் தன் கந்த புராணத்தை அரங்கேற்றுகிறார். ' திகட சக்கரம்' எனத் தொடங்கும் முதல் பாடலிலேயே ஒரு இலக்கணப் பிழை இருக்கிறது என்று சில இலக்கணப் புலிகள் கொந்தளிக்கிறார்கள். முருகனே வந்து பிரச்சனையை முடித்து வைக்கிறார். அதன் பின் யாரும் எந்தக் குறையும் இருப்பதாக வாயைக் கூடத் திறக்கவில்லை. அலுவலக உத்திகளில் ஒன்றை தமிழ் இலக்கிய உலகின் ஒரு நிகழ்வோடு லாவகமாக இணைக்கும் இந்தக் கண்ணி, முத்துலிங்கத்தின் முத்திரைக் கண்ணி!

'முடிச்சு' கதையும் இப்படித்தான். சமையல் அறைப் பாத்திரங்கள் செய்யும் ஒரு பெரு நிறுவனத் தலைவருக்கு ப்ரொடக்ஷன் தாமங்களினால் தொல்லைகள். உற்பத்தி நடக்கிறதே தவிர 'ஓர்டர்களை' நிறைவேற்றும் வேகம் சுமாராக இருக்கிறது. தலைவர் விடைகளைத் தேடி சாமியாரிடம் போகிறார். வழியில் தோசை சுடும் கிழவி, சுட்ட தோசையை பெட்டியில் வைத்து பேக் செய்யும் போது வாழை இலையை பெட்டியில் சொருகி, மேல் இலையை மடித்து வைக்கிறாள். அவ்வளவுதான்- தலைவருக்கு ஐடியா கிடைத்து விட்டது. சமையல் பாத்திரங்களின் பிடிகளை ( handle) மடித்து பேக் செய்தால் பேக்கிங் டப்பாவின் அளவு பாதியாகக் குறைகிறது என்று கண்டறிகிறார். டப்பாக்கள் இப்போது வேகமாக



Scanned with CamScanner

நிரப்பப்படுகின்றன. ப்ரொடக்ஷன் வேகம் பிடிக்கிறது.சின்னச் சின்ன ஐடியாக்களில் பெரிய பெரிய மாற்றங்கள் எத்தனை நடந்திருக்கின்றன கார்பரேட் உலகத்தில். கிரேக்க புராணங்களில் வரும் கார்டியன் முடிச்சை நினைவு கூர்கிறார் அ.மு. அவிழ்க்கவே முடியாத ஒரு முடிச்சு இருந்ததாம். அலெக்ஸாண்டர் அதை ஒரு வினாடி உற்றுப் பார்த்தானாம் ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்தினானாம். தீர்க்கவே முடியாத பிரச்சனைகள் உண்டா என்ன,முடியா இரவு உண்டா என்ன? எல்லா முடிச்சுகளும் அவிழும் என்ற நம்பிக்கையைத் தரும் ஒருலாங் ஷாட் கதை இது.

‘ஒரு சாதம்’ - என் சோர்வு, தாழ்ச்சிகளை ஒவ்வொரு முறையும் நீக்கும் கதை. ஒரு லட்சம் வரிகளுக்கு மேலதிகமான நீளம் கொண்ட கம்யூட்டர் சோர்ஸ் கோடில் தப்பு வந்தால் எங்கே தவறு என்று எப்படி சார் கண்டு பிடிப்பது? கண்டு பிடித்த பின் கதாநாயகன் நினைக்கிறான் - இந்தப் பாதையில் தான் அந்தப் பாம்பு படுத்திருந்திருக்கிறது. எத்தனை முறை இந்த வழியாகப் போயிருப்பேன்! இது வரை கண்ணில் படவில்லையே .. சரி செய்ய ஆகும் நேரம் ஐந்து நிமிடம் தான். தப்பு எங்கே என்று கண்டு பிடிக்கத்தான், நாள் கணக்கில், ஏன் மாதக்கணக்கில் கூட காலம் செல்லும். முத்துலிங்கம் இதை எப்படி எழுதினார் என எனக்குத் தெரியாது . ஆனால், ‘இதேதான், இதேதான்’ என என் மனம் கூவுகிறது. என் அலுவலகத்தில் எதோ பிழைகள் வரும்போது , ‘ கண்டு பிடிச்சு சரி செய்யுங்கப்பா’ எனச்சொல்லிவிட்டு மேலதிகாரிகள் விடை பெறுவர். அடுத்த நாள் ,காலை ஒன்பது மணிக்கு அவர்கள் மீண்டும் அலுவலகம் வரும்போது, இரவெலாம் தூக்கம் இன்றி ,உழைத்துக் களைத்துக் கன்றிச் சிவந்த கண்களோடு, ‘காலையில 5 மணிக்கு கண்டு பிடிச்சோம் பாஸ், ப்ரோக்ராம்ல எங்க மிஸ்டேக் இருக்குன்னுட்டு. சரி பண்ணி, திரும்ப ஓட்டிட்டு இருக்கோம். சரியாயிடும்’ - என்று பதில் சொல்லும் ஐ.டி இளைஞர்களை இந்தக் கதை முழுக்க நினைத்து ,நினைத்துக் கரைந்தேன்.

இன்றைய அலுவலங்கள் நவீன வதைக் கூடங்கள். கூட்டுவதும் , கூட்டியதில் விலக்குவதும், காட்டுவதும், காட்டியதை மறைப்பதும், ஆட்டுவதும் ஆடியதை அடக்குவதுமான நவீன பரம்பதங்கள். இந்தத் தொடர் ஓட்டத்தில் ஓடும் எம் வாழ்வில், ஔவையையும், கம்பனையும் கச்சியப்பரையும் இணைக்கும் ரசவாதி எங்கள் அ. முத்துலிங்கம் சார். என் பட்டிமண்டப நண்பர் திரு. ராஜா அவர்கள் கனடா போனபோது முத்துலிங்கம் சாரைச் சந்தித்து இருக்கிறார். அங்கிருந்து அவரோடு தொலைபேசியில் என்னைப் பேச வைத்தார். பேச வைத்த அந்த நொடி, என் வாழ்வில் நான் புத்தக நடுவில் பத்திரப்படுத்திய மயில் தோகையைப் போல பொத்தி வைத்திருக்கும் நல் ஞாபக நொடி.

‘கிட்டு வளர்த்த குரங்கு’ என்னும் அவரின் கட்டுரை தொடங்கி நிறையப் பேசினோம். பிறகு, விகடன் யூட்யூபிற்காக அவரை நேர் காணல் செய்தோம்.அந்த நேர் காணலில் நாங்கள் சிரித்த சிரிப்பும், சிந்தியகண்ணீரும் சொல்லி மாளா. பல்லாயிரக்கணக்கானோர் பார்த்து அவரைக் கொண்டாடினார்கள். அவரோடு பழகும், அவரைப் படிக்கும் யாரின் நினைவிலும் பிரியமாகப் போய் அமரும் ஓர் இலக்கிய ஆளுமை அவர். அவரின் மானிட மாண்புகள், எல்லாரையும் அன்பொழுக விசாரிக்கும் தேன் தடவிய சொற்கள், இறங்கும் இடம் இன்னும் கண்ணுக்குப் புலப்படாமல் பறந்தலையும் பறவைகளைப் போன்ற புலம் பெயர்ந்த வாழ்வையும் கூட அதன் வண்ணங்களோடும் நுட்பங்களோடும் காட்டுகிற அவரது உற்சாக ஊற்றுக்கண் வழிந்திடும் கருணை, இலக்கிய வானில் அவரது உயரத்தை அடையவே முடியாத எங்களையும் தன் சிறகுகளின் விசையினால் மேலெற்றும் அவரின் எளிவந்த தன்மை.. என்ன சொல்ல…? வாழ்த்துகள் சார்.இன்னும் ஒரு நூற்றாண்டு இருங்கள்!



அன்புடன்
பாரதி பாஸ்கர்

'ஆஸ்டின் சௌந்தர்' அவர்களால் தொகுக்கப்பட்ட 'ஆறாம் திணையின் கதவுகள்' என்ற கட்டுரைத் தொகுதியில் இடம் பெற்ற கட்டுரை



Scanned with CamScanner

# பாப்பையா ரசிகன் To ரஜினி மாமனார்

பண்டிகைன்னா பட்டாடை, பட்டாசு, பலகாரம்ங்கிற வரிசையில் அடுத்து நம்ம நினைவுக்கு வருவது 'பட்டிமன்றம்'. இன்றைய டி.வி. யுகத்தில் இவ்வளவு 'பாப்புலரா' இருக்கிற இந்தக் கலை வடிவம் தமிழரிடையே மிகப் பழங்காலத்திலேயே அறிமுகமாகியிருந்ததை 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்' என்று 'மணிமேகலை' ஆசிரியர் குறிப்பிடுவதிலேர்ந்து தெரிஞ்சுக்கலாம் கம்பராமாயணம்கூட 'பன்னருங்கலை தெரிபட்டிமண்டபம்' என்று பேசுகிறது. பட்டினப்பாலையிலும், மணிவாசகர் அருளிய திருவாசகத்திலும் இக்கலை பற்றிய செய்திகள் இருக்கின்றன.

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் தர்க்கம் அல்லது வாதத்திறமையும் ஒன்று. இன்னைக்கும் கிராமத்து திருவிழாக்கள்ல 'சிவபெருமான் காமனை எரிச்சாரா? இல்லையா?ங்கிறதை மையமா வச்சு 'எரிஞ்ச கட்சி-எரியாத கட்சின்னு இசையோடு கூடிய விவாத நிகழ்ச்சிகள் நடக்கிறதுண்டு. இசையோடு கூடிய விவாத ஸ்ரீவள்ளி திருமண நாடகத்தில் கூட நாரதருக்கும் ஸ்ரீவள்ளிக்கும், முருகனுக்கும் வள்ளிக்கும் இடையில சூடான சுவையான தர்க்கம் நடக்கும். பட்டிமண்டபம் அல்லது பட்டிமன்றம் என்ற சொல்லுக்கு 'அறிஞர்களால் சூழப்பட்ட் அவை'ன்னு அர்த்தமாம். ஒரு கருத்தை ஒட்டியும், வெட்டியும் விவாதிக்கின்ற இப்பட்டிமன்றக் கலையை முறைப்படுத்திய பட்டிமன்றப் பிதாமகன், கம்பன் அடிப்பொடி அமரர் சா.கணேசன் அவர்கள் தான்! காரைக்குடி கம்பன் கழகத்தில் ராமாயணச் சிந்தனைகளை விவாதிக்கின்ற அரங்கமாக மக்கள் மத்தியில் பட்டிமண்டபங்களை கம்பன் அடிப்பொடி அவர்கள் அறிமுகம் செய்தார். கம்பன் கழகங்கள்ல படிச்சவங்க மத்தில் பவனி வந்துட்டிருந்த இக்கலை வடிவத்தைப் பாமரரும் ரசிக்கும்படியா வீதிகள்ல அரங்கேற்றியவர் மறைந்த தமிழ் மாமுனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ஆவார்.

திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற இலக்கியங்களையும், காந்தியம், மார்க்ஸியம் போன்ற பொருளாதாரச் சிந்தனைகளையும் தமிழகத்தின் முன்னணி பேச்சாளர்கள் அலசி ஆராய அதன் நிறைவில் அடிகளார் வழங்கிடும் தீர்ப்புக்காகவே பெருந்திரளாக மக்கள் கூடுவர் அந்தக் காலத்தில். தமிழறிஞர்கள் கி.வா.ஜ, ம.பொ.சி., எம்.எஸ்.நாடார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தன், தா. பாண்டியன், குமரி அனந்தன், நாவலர் நெடுஞ்செழியன், அறிஞர் எஸ். ராமகிருஷ்ணன், திருச்சி ராதாகிருஷ்ணன், முனைவர் தமிழண்ணல், கவியரசு கண்ணதாசன் போன்ற பிரபலங்கள் கூட பட்டிமன்றங்கள்ல பேசியிருக்காங்க. இலக்கிய வீதிகள்ல உலா வந்துக்கிட்டிருந்த பட்டிமன்றங்கள் 1970களுக்குப் பிறகு சமூக, குடும்ப விஷயங்களுக்கு மெல்ல மாறத் தொடங்கியது. அடிப்படைக் கல்வியைக்கூட அறியாத கிராமத்து ஜனங்க, குறிப்பா பெண்கள், குடும்பத் தலைப்புகள்ல இலக்கிய மேற்கோள்களோட பேச்சாளார்கள் பேசறப்ப, ரொம்ப ரொம்ப ஈடுபாட்டோட ரசிக்க ஆரம்பிச்சாங்க.

சாலமன் பாப்பையாவை நடுவரா வச்சு பேராசிரியர்கள். கு. துரைராஜ், சொல்விளங்கும் பெருமாள், சக்தி பெருமாள், தமிழ்க்குடிமகன், தா.கு. சுப்பிரமணியன், த.ராஜாராம், எம். ராமச்சந்திரன், புலவர் இரா. காந்தி...ன்னு சிறந்த பேச்சாளர்கள் தங்கள் புலமையாலும் புத்திசாலித்தனமான வாதங்களாலும் நல்ல நகைச்சுவையாலும் பட்டிமன்றங்களுக்கு பெருமை சேர்த்தாங்க. என்னோட சினிமாவுக்குக்கூட இன்டர்வெல் விட வேண்டியிருக்கு...இதென்ன சார்! இரண்டரை மணி நேரம் எந்திரிச்சுப் போகாம ஜனங்க இம்புட்டு ஆர்வமா உங்க பட்டிமன்றத்தை ரசிக்கிறாங்கன்னு இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் தமிழறிஞர்.சாலமன் பாப்பையா பட்டிமன்றத்தை ஒருமுறை நேரில் ரசிச்சிட்டுப் பாராட்டினார்.

தொலைக்காட்சியின் வரவுக்குப் பின் தூர்தர்ஷனும், சன் டி.வி. போன்ற 'சாட்டிலைட் சேனல்'களும் கொடுத்த வாய்ப்பாலே பண்டிகை ஸ்பெஷலாகப் பட்டிமன்றங்கள் தமிழ் நெஞ்சங்களில் ஒட்டிக்கொண்டன. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, தமிழகத்தில் வாழ்கின்ற மார்வாடிகள், ராஜஸ்தான் மக்கள் போன்றோரும், கர்நாடகா, கேரளா, ஆந்திராவிலுள்ள பலரும் சன் டி.வி. பட்டிமன்றங்களை ரசிக்கின்றனர் என்பதை அவர்கள் வாயிலாகவே நாங்க கேட்டு சந்தோஷப்பட்டிருக்கோம்.

அசட்டுத்தனமான ஜோக்குகளும், அபத்தமான ஆர்க்யூமென்ட்ஸ்மா, அதே பேச்சாளர்கள் முகங்காட்ட பட்டிமன்றங்கள் வர-வர... வெட்டி மன்றங்களா ஆயிடுச்சுன்னு 'கமென்ட்' அடிக்கிறவங்களும், 'கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?' ங்கிற தலைப்புலேயெல்லாம் பேசலாமா? ன்னு கோபிக்கிறவங்களும் இருக்கத்தான் செய்யுறாங்க. 1960லேர்த்து இன்று வரை, தான் பங்கேற்ற எல்லா நிகழ்ச்சிகளோட இன்விடேஷன்களையும், முறையா 'ஃபைல்' பண்ணி வச்சிருக்கார் பேராசிரியர் சாலமன் பாப்பையா. அதுல தேடிப் பார்த்தப்ப, 'வாழ்க்கை சிக்கலை வென்று சிறந்தவர் சீதையா? கண்ணகியா?' ன்னு பட்டிமன்றம் நடந்திருக்கே தவிர இந்தக் குற்றச்சாட்டுக்கு ஒரு ஆதாரத்தையும் காணோம். வெறும் குடும்பச்சண்டையா மட்டுமில்லே... ரத்ததானம்... சர்க்கரை நோய், இதய நோய், எய்ட்ஸ் விழிப்புணர்வு... ஆலைகளின் உற்பத்தித் திறன்... சாலைப் பாதுகாப்பு... மக்கள் தொகை கட்டுப்பாடு... மனிதவள மேம்பாடு... சமய நல்லிணக்கம்... சுற்றுச்சூழல் மற்றும்



Scanned with CamScanner


சுகாதாரம் பேணுதல்... பெண் விடுதலை... இளைஞர் நிலை... கல்விச் சீர்திருத்தம்... இன்ஷ்யூரன்ஸ்... இன்வெஸ்ட்மென்ட்ஸ்...இப்படி எத்தனையோ தலைப்புகள்ல பட்டிமன்றங்கள் நடத்தியிருக்கோம்.

சிகாகோ தமிழ்ச்சங்கத்துல 'ஆங்கிலக் கலப்பில்லாமல் தமிழில் பேச முடியுமா? முடியாதா?ன்னு ஒரு பட்டிமன்றம், மதுரை டி.வி. எஸ். மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தினத்தன்னிக்கு 'மிகுந்த சவாலாய் இருப்பது ஆரம்பநிலை ஆசிரியப் பணியா? மேல்நிலை ஆசிரியப் பணியான்னு? ஆசிரியர்களின் அன்றாட நிகழ்ச்சிகள் அலசப்பட்டன. இலக்கியத்தில் பிறந்து சமூகம் சார்ந்து குடும்பங்களில் குடியேறி, சினிமாவைப் பார்த்து இன்றைக்கு அறிவியல் உலகிலும் அடியெடுத்து வைத்திருக்கிறது தமிழ் மொழியின் தனிச்சிறப்புகளுள் ஒன்றான பட்டிமன்றம்.

அது சரி... பேராசிரியர்களே அலங்கரிக்கிற பட்டிமன்ற மேடைகள்ல 'பேங்க் ஸ்டாஃப்' நீங்க எப்படிப் பேச வந்தீங்க?'ன்னு என்னிடம் சிலர் கேக்கலாம். பள்ளிப் பருவத்திலேருந்தே பாப்பையா சாரோட மேடைப் பேச்சுக்கு ரசிகனாகிப் போன நான், வீதிகள்ல நடந்த படடிமன்றங்களையெல்லாம் மண் தரையில் முன் வரிசையில உக்காந்து கேட்டு மகிழ்வேன் பக்கத்து ஊர்களுக்கு பயணிக்கும் போதெல்லாம் அந்தக் குழுவினரோடு அடிஷனல் லக்கேஜா' அட்டை மாதிரி ஒட்டிக்குவேன். எனக்குள்ளிருந்து இலக்கிய ஆர்வத்தை எப்படியோ தெரிஞ்சுக்கிட்ட பாப்பையா சார் மதுரை பட்டிமன்றம் ஒன்றில் 'சப்ஸ்டியூட்டா' மேடை ஏத்தினார். அதுக்கப்புறம் மூணு நாலு வருஷம் 'வெயிட்டிங் லிஸ்ட்.... ஆர்.ஏ.சி.ன்னு நம்ம மேடைப்பயணம் தொடர்ந்துச்சு.

வழக்கமான பேச்சாளர்கள் மாதிரி தோற்றப் பொலிவோ, இலக்கிய பின்னணியோ, வார்த்தை வளமோ, இல்லாம எளிமையான பழகு தமிழை பேசுன எனக்கும், மக்கள் கொஞ்சம் வரவேற்பும் உற்சாகமும் கொடுத்தாங்க. 1997லேர்ந்து சன் டி.வி பட்டிமன்றங்கள்ல தவறாம கலந்துகிட்டதால உலக தமிழரிடமெல்லாம் ஓரளவு அறிமுக கெடைச்சுது. இம்புட்டு ஏன் ? 'சிவாஜி' படத்துல ஸ்ரேயாவோட அப்பாவா யாரை நடிக்க வைக்கலாமுன்னு டைரக்டர் ஷங்கர் யோசிச்சுகிட்டிருக்கையில் 2006 பொங்கல் பட்டி மன்ற "க்ளிப்பிங் சன் டிவியில வந்திருக்கு. அதுல என்னைப் பார்த்ததுமே ராஜாவையே ஃபிக்ஸ் பண்ணிடலாம்னு முடிவு செஞ்சாராம் ஷங்கர் சார். பட்டி மன்ற அறிமுகம் தான் சூப்பர் ஸ்டாரோட மாமனாரா நடிக்கிற வாய்ப்பையே எனக்கு வழங்கியிருக்கு. இத்தனை ஆண்டு பட்டி மன்ற பயணத்துல் எத்தனையோ நிகழ்வுகள் என் நினைவு ஏடுகளில் நிழலாடுகின்றன.

நாகர்கோவிலை ஒட்டிய ஒரு கடற்கரை கிராமத்தில் ஒரு பட்டிமன்றம். மெயின் ரோட்டுல இருந்து ஆள் அரவமற்ற ஒற்றைச் சாலையில் நாலஞ்சி கி.மீ . போனத்தான் அந்த ஊரை அடையலாம். எங்க நிகழ்ச்சி தொடங்குன அரை மணி நேரத்துல கடுமையான காற்றும் மழையும் சேர்ந்து விழாவைப் பாதியிலே நிறுத்தவே, நாங்க வேன்ல மதுரைக்கு கௌம்புனோம். ஈ காக்கா இல்லாத அந்த இருட்டு ரோட்ல மழைக்குப் பாதுகாப்பா தலையில கோணிச் சாக்கை போட்டுகிட்டு, கையில அரிகேன் லைட்டோட எங்க வேனை வழி மறிச்சார் ஒரு சீனியர் சிட்டிசன். ஐயா .... காத்தடிச்சல கரண்ட் கம்பி ஒண்ணு அறுந்து போயி ரோட்டுக்குக் குறுக்கால தொங்குது . வண்டியில அது உரசச்சுன்னா உங்க உசுருக்கு ஆபத்தாயிடுமேன்னு வேற வழியில உங்க வேனை திருப்பி விடுறதக்காகத்தான் இங்ஙன வெயிட் பண்ணுறேன்னு அந்த தாத்தா சொல்லவும் நெகிழ்ந்து போன நாங்க ரொம்ப நன்றி ஐயா... எங்க ஞாபகமா இதை வைச்சிகங்கன்னு ஒரு சால்வைய கையில திணிச்சோம் . . . இந்த கிராமத்துக்கு வந்தவுகள பத்திரமாத் திருப்பி அனுப்புறது எங்க கடமையில்லயா? அதுக்கெல்லாம் அன்பளிப்பு வேணாமுங்கன்னு பிடிவாதமா மறுத்த அந்தப் படிப்பறிவில்லாத பாமர மனிதர், எல்லாத்துக்கும் கை நீட்டியே பழகிப்போன அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் விட உசந்த மனுசனா எங்க கண்களுக்கு காட்சித் தந்தார்.



போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை வவுனியாவுக்கு போயிருந்தப்போ ஒரு பாட்டியம்மா, எங்க கைகளைப் புடிச்சுகிட்டு எந்த நேரம் ஆர்மிகாரன் குண்டு விழுமோன்னு ஒவ்வொரு நிமிஷமும் உசுருக்குப் போராடுற எங்க சனங்க முகத்திலயும் கொஞ்சம் சிரிப்ப வரவழக்கறது உங்க பட்டிமன்றம்தான் கண்ணீர் மல்க பேசுனப்ப. . இந்த பட்டி மன்றங்களால் என்ன பயன்? அப்படின்னு கேள்வி எழுப்புறவங்களுக்கு அந்தப் பாட்டியம்மாவோட வார்த்தைகளையே பதிலா குடுத்திடலாம்னு நெனைச்சுக்கிட்டேன்.

ஆமாங்க. வேறு எதுக்கு உதவுதோ இல்லையோ .... குடும்பத்துல இருக்குற அத்தனை பேரும் மொத்தமா உக்காந்து . வாய்விட்டு சிரிக்க, வாதங்களை ரசிக்க... இடையிடையே சிந்திக்க வாய்ப்பு தருதியில்லையா எங்க பட்டிமன்றங்கள்!!



Scanned with CamScanner

# கவிதைகள்

## தாய்மை



பசியை மென்று
வறுமையைத் தின்று
வளர்ந்த குடும்பம் என்றாலும்
குறைவில்லை ஈன்ற கன்றுகளுக்கு.

கட்டிலில்லாத வீட்டில்
தொட்டிலில் எப்போதும் உறங்கும்
குட்டிகள் இரண்டு.

களைத்து வரும் கணவனுக்கு
சமைத்துப் போட்டே
இளைத்துப் போன அம்மா
இலையில் பரிமாறுவாள் அவளையே
உலையில் போட அரிசியில்லாத நாட்களில்.

எட்டுக்கு எட்டு அறையில்
எட்டுப் பிள்ளைகள் படுத்துறங்க
எட்டிப் படுத்தும் எப்படியோ
குட்டி வளர்ந்தது வயிற்றில்
மூத்தவள் வயதுக்கு வந்து
மூன்று ஆண்டுகள் ஆன பிறகும்.

சாமமெல்லாம்
காமம் பார்த்து வளர
பாவம் அவள் என்ன செய்வாள்
அடுத்த வீட்டு அவனோடு
எடுத்தாள் ஓட்டம் வீட்டைவிட்டு.

நகரத்தில்
தஞ்சம் அடைந்தாலும்
நரகமாய் நாட்கள் கடந்தன,
பத்துப் பாத்திரம் தேய்த்து
பசியைப் போக்கினாள் அவள்.
சைக்கிள் ரிக்சா ஓட்டினான் அவன்.

பகலில் உழைப்பு
இரவில் களிப்பு என
கழிந்த காலத்தில்
பிறந்தன பிள்ளைகள் இரண்டு
ஆண் ஒன்று பெண் ஒன்று.

பிள்ளைகளைக் கரைசேர்க்க
நிற்காமல் உழைத்தும்
நிற்கவில்லை கையில் காசு.

குளுகுளு அறையில்
வேலை செய்ய வாய்ப்பு வந்தது அவளுக்கு.
அவனுக்கு அதில் விருப்பமில்லை
எப்படி அவளில்லாமல் முடியும் தனியே
என்று.

எப்படியோ சம்மதிக்க வைத்தாள் அவனை
நிறைய பணம் கிடைக்குமென்று.
அதுவரை பிள்ளைகளை
பார்த்துக் கொள்வது அவனென்ற ஒப்பந்தம்.
மகிழ்ச்சியாய் பிள்ளைகள்
ரிக்சாவில் உட்கார்ந்து விளையாட

அருகில் உள்ள மருத்துவமனையில்
குளுகுளு அறையில் அவள்
வாடகைத் தாயாக...!!!!

**#வாஞ்சிவரிகள்#**



Scanned with CamScanner



சாலையோரத்தில்
முளைக்கும் செங்கல் மரங்கள்.
பணம் காய்த்துக் கொட்ட
வனத்தை அழித்து
பிணமான மரங்களும்
கதவு சன்னலாகிப் போக
வந்து போகும் ஊர்க்குருவிக்கும்
தங்க இடமில்லை.

வயிற்றுப் பிழைப்பிற்கிருந்த
வயல்வரப்பெல்லாம்
மனையிடமாகிப் போய்விட
பட்டினிக்குப் பயந்து
கட்டிடப்பணியிடம் தஞ்சம்.

கட்டாந்தரை வாழ்க்கையில்
கடவுள்தந்த கைப்பிள்ளையை
விட்டுவர வீடுமில்லை விடுதியுமில்லை.
கட்டையில் கட்டி
தொட்டிலில் போட
மாற்றுச்சேலையுமில்லை
இற்றுப்போன வேட்டியுமில்லை.
ஒற்றைச்சேலையில்
கற்பை மறைக்க ஒருபாதி
பிள்ளை உறங்க மறுபாதி.

கசக்கிப் பிழிந்தாலோ
கந்தலாகிப் போகும்
கந்தையின் கச்சையில்
கச்சிதமாய் படுத்தபடி
கட்டிடக் கண்காட்சியை
கண்டு ரசிக்கும் குழந்தை.

பிட்டுக்கு மண்சுமந்த வரலாறு அன்று
பிடிச்சோற்றுக்கு கல்சுமக்கும் கோளாறு இன்று
தலையில் கனத்தைச் சுமந்துதான்
உலை கொதித்து உயிர்வாழுமிவள்
நிலை கண்டு கொலை நடுங்குகிறது.

ஏழையாய்ப் பிறந்தாலும்
கோழையாய் கிடக்காமல்
தோளிலே தூளிகட்டி
தூளியில் குழந்தையோடு
கூலிவேலை செய்யும்
தோழியே நீவிர்
வாழியவே..!!!

**#வாஞ்சிவரிகள்#**





| ஆங்கிலம் | தூயதமிழ் |
|---|---|
| CC Tv– | மறைகாணி |
| OCR– | எழுத்துணரி |
| LED– | ஒளிர்விமுனை |
| 3D– | முத்திரட்சி |
| 2D– | இருதிரட்சி |
| Projector– | ஒளிவீச்சி |
| Printer– | அச்சுப்பொறி |
| Scanner– | வருடி |
| Sim Card– | செறிவட்டை |
| Charger– | மின்னூக்கி |






Scanned with CamScanner

## வலி

காலங்கள் கடந்த போதிலும்,
காயங்கள் காயந்த போதிலும்,
நெஞ்சத்து நினைவுகள் சில,
நஞ்சாய் இருந்து,
விழிகள் நனைக்கிறது,
வன்மம் வளர்க்கிறது
அறிவு அடங்குகிறது,
அன்பு அழிகிறது,
உணர்வுகள் இருந்தும்,-மனம்
உடனிருப்பவர்களிடம் காரணமின்றி
உக்கிரத்தை உமிழ்கையில்
உண்மை உணர்ந்து
உறங்குவதில்லை மாறாய்
வார்த்தைகளால் வெளிப்புடுத்தி
வடிகால் தேடுகிறது.
பெண் மனம் ஆழமானது மட்டுமல்ல
பொய்மையற்றதும் கூட,
கோபத்தை மறைக்க தெரியாது.
ஆம், தான் செய்யாத தவறிற்கு
தண்டனை ஏற்கும்
பெண் மனமானது
இத்தகையது-
எத்தனை காலமானாலும்!

## விதை

விதை விதைத்தவுடன் முளைத்துப் பயிராக
விதை விரமன் வித்தையல்ல!
விதையின் வளர்ச்சி :-
விதையின் தரத்தை
மண்ணின் மணத்தை
விண்ணின் வளத்தை
விதைத்தவன் வினையை
வினையின் அளவை
காலத்தின் கனிவைக் கொண்டே
பயிரின் பரிணாமம் அமையும்
அவ்வாறு அமையாவிடினும்
முயற்சி, முனைப்பு,
மூளை, உழைப்பு
இவையாவும் 9
இறைவனின் அருளைப் பெற்றுத்தரும்!
இறைவனின் அருளானது
இன்னல் களைந்து,
இவ்வுலகில் வெற்றித்தரும்!!

- கனி

## பலமுகங்கள்

ஒவ்வொரு மனிதனுக்கும்,
எத்தனை முகமிருக்கு.
எண்ணி பார்த்தால் தானே
தெரியும் நிஜக்கணக்கு.
காலை முதல், மாலைவரை,
பல முகங்களின்அணிவரிசை.
இத்தனை முகங்களில்
நம் நிஜமுகம் புதைந்து,
நாம் யார் என்ற கேள்வியோடு
வாழ்கை முடிந்தே போகிறது.
உண்மையில் வாழ்கிறோமா?
பிடிக்காத படிப்பு,
மனம் விரும்பா வேலை,
கடமைக்குக் கல்யாணம்
அனுசரித்து வாழப் பழகிக்கனும்
என்று வாழத் தானே, காலக் காலமாய்
நமக்கும் கற்றுக்கொடுக்க படுகிறது.

அனைவரும் செய்வதை செய்வோம்
என ஆட்டுமந்தை கூட்டம்போல,
தனித்துவம் மறந்து, சுய விருப்பங்கள் துறந்து
மந்தை மந்தை ஓடிக்கொண்டிருக்க
பல முகங்கள் தேவைத்தான் படுகிறது.
கடைசியா விரும்பியதை செய்தது எப்போது ?
நினைவில் இருக்கிறது இப்போது ?
மறதி கூட ஒரு முகமாச்சி,
சிந்தித்து வாழ மறந்தேபோச்சி.
பகடை காய்களின் பலமுகம் போல்,
உருட்டுவோர் கைப்பொருளாய் மாறித்தான்
விட்டோம்.
எல்லா முகங்களையும் அலசிப்பார்த்தால்,
ஆராயமுடிவெடுத்தால், சுயதேடலுக்கு
தயாரானால்.
நாம் நம்மை அறியலாம், பலமுகங்கள்
களையலாம்

- அருள்செல்வி அமிர்தலிங்கம்
இரவின்,கலிபோர்னியா



CLS HEALTH

**Maheswary Jegatheswaran, MD**

Primary Care & Internal Medicine

6514 US 90 Alt., Ste 100, Sugarland TX 77498

P: 281-313-0100 F: 281-699-2151



cls.health/primary-care

Online appointment avilable on

https://www.zocdoc.com/doctor/maheswary-jegatheswaran-md-409969






Scanned with CamScanner

## கவிதைத் துளிகள்

கன்னங்கருத்தவள்
கன்னம் சிவந்தாள்
காதலாம்!

******

மம்மி பின்னிடுவாங்க
நம் காதல் தெரிந்தால்,
பாப்தலைக்காரியின் பயம்!

******

“நீ பெரிய ஜொள்ளுடா
நீ மட்டும் என்ன?
பெரிய லொள்ளுடி”
நாய்களின் காதல் மொழி!

******

முறம் கொண்டு புலியை
விரட்டினாளாம்!
முறத்தில் இருந்த
முந்தாநேத்திச் சோறை
முகர்ந்ததோ புலி?

******

தான் புலியை விரட்டிய வம்சமாம்
என் வயிற்றில் புளியைக்கரைக்கும்
என்மனைவியின் பெருமை!



திரு .ஆர் .ஏ .நாராயணன்

மையலில் கூந்தலைப்
புகழ்ந்தேனாம்
சமையலில் போட்டு விடுகிறாள்!
அவள் கூந்தல் அழகுதான், ஆனால்
சமையலில் வந்தால் கோபம்
வருகிறதே!!

******

“மெய்”க்குக் கால் கிடையாது
அதுதான் நொண்டுகிறது!
“பொய்”க்குக் கால் உண்டு
அதுதான் வீறு நடை போடுகிறது!!

******

மெய்யன்பர்களின் கூற்று
“வாழ்க்கையே பொய்” –எனில்
பொய்யான வாழ்க்கையில்
பொய் கூறினால் என்ன குற்றம்?






Scanned with CamScanner

# நில நடுக்கம்



உன் காலடி ஓசைக்கு
உயிர்கள் நடுங்கியதே
உன் வருகையின் சீற்றத்தில்
பல உயிர்கள் மாய்கிறதே
பாதத்தின் கீழே இருந்த
பாதை நழுவுதே
அகண்ட வாய் திறந்து
அண்டம் பிளக்கிறதே!

இடியும் மின்னலும்
வானில் கண்டோம்
நிலத்தில் கண்டதும்
நிஜங்கள் மறைகிறதே
மண்ணின் மைந்தர்கள் நாம்
இறுமாப்புடன் இருந்தோம்.
அந்த மண்ணே வாய் திறந்தால்
தாங்குமா நம் வாழ்வு!

அடுக்கு மாடி கட்டிடங்கள்
சிறிய துண்டுகளாய் சரிய
ஆயிரங்கள் கொடுத்த வாகனங்கள்
மண்ணோடு மண்ணாக
சேமித்து கட்டிய வீடுகள்
செதில் செதிலாக
விலை மதிப்பில்லா குழந்தைகள்
ஒளிய இடம் தேடி ஓட
கூக்குரல் ஓசைகள்
வானைத் துளைக்க
மரண ஓலங்கள் மனதை பிழிய
பூமி தாயே ஏன் இந்த சீற்றம்?

அள்ளித்தரும் இயற்கை அன்னையே
உன்னை கிள்ளி பார்த்துவிட்டோம் போலும்
பொறுத்து அருள் தாயே
உன் கோபம் உலகம் தாங்கிடுமா?
விழித்துக்கொள் மானுடனே!
விண் காப்போம் - நம்
மண் காப்போம்.
இயற்கை அன்னையை அள்ளி அரவணைப்போம்
!!

**சமீபத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்க பட்ட எல்லோருக்கும் இந்த கவிதைசமர்ப்பணம். **

- **ஸ்ரீ தேவி சுப்பிரமணியன்**








Scanned with CamScanner

# சம்போ.. சிவ சம்போ .. சிவ சம்போ..

சிவ சம்போ..
இந்த பாட்டு சன் டிவில ஓடிட்டு இருந்தது.
அந்தக் காலத்துல தமிழ்ல ஒரு ராப் சாங்...
எல்லாரும் இன்றும் விரும்பும் பாடல்... இதில் சர்வசாதாரணமா ஆன்மிகம் தெறிக்கும்.... ஆனா உள் அர்த்தம் பலருக்கு தெரியாது.

... சம்போ சிவனின் சுகமான நிலை.
? ஆரம்ப சாதகர்களை விளையாட்டு போக்கில் ஆழ்நிலைக்கு அழைத்துச் செல்லும் அரூப... அதிர்வெண்....
ஷம்போ ...
அது ஒரு சுயம்புநிலையின் வெளிப்பாடு ...
ஷிவா என்று நாம் குறிப்பிடும் அந்தத் தன்மையின் விளையாட்டு.ஷம்போ..

ருக்குமணி வண்டி வருது...
எனும் பாடல் படி.... சம்போ என்பது சிவனின் இயக்க நிலை. சம்போ இல்லாத ஒரு அணுகூட இல்லை. ஒவ்வொன்றிலும், அந்த முழுமைத்தன்மை, படைப்பின் அந்த மூலம் இருக்கின்றது. அதன் காரணமாகத்தான், அது எந்தவிதமாக நிகழ்கிறதோ அந்தவிதமாக படைப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. படைப்பின் ஒவ்வொரு பகுதியிலும், அது எவ்வளவு சிறியதோ அல்லது பெரியதோ, படைப்பின் மூலம் தொடர்ந்து தன் விளையாட்டை அதில் நிகழ்த்தியவாறு உள்ளது.

தொன்றுதொட்டு, "ஈஸ்வரன்" என்ற பெயரில் நாம் அழைப்பது அவனது ஒரு வடிவத்தை. அடுத்ததாக சுபிக்ஷமான ஒருவர் "சம்போ" என்றழைக்கப்படுகிறார். அடுத்ததாக காலத்தைக் குறிப்பவராக, மிகவும் ஆழமான பரிமாணமாகிய "காலா" அல்லது "மஹாகாலா" இருக்கிறார்.

ஆகவே ஷிவாவைக் குறிப்பிடும் மற்ற எல்லா பெயர்களும் மற்றும் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு படைப்பும் அந்த ஒன்றுமில்லாத தன்மையிலிருந்து வெளிப்பட்டதுதான், அப்படித்தானே? இன்றைக்கு இது அறிவியல்பூர்வமான உண்மையாக இருக்கிறது. அது என்னவாக இருந்தாலும், உலகத்தில் உள்ள அனைத்தும் இதிலிருந்து வந்தவைதான்.

ஒரு குகையைப் பார்த்தால் நாம் குகேஸ்வரன் என்போம், உலகத்தைப் பார்த்தால் நாம் விஸ்வேஷ்வரன் என்போம், மேகத்தைப் பார்த்தால் மேகநாதன் என்று கூறுவோம். படைப்பில் காணும் ஒவ்வொன்றையும் நாம் அவனாகவே உருவகிக்கிறோம். மனிதரின் புரிதலுக்காக உருவகம் முக்கியமாக இருக்கிறது என்பதுடன், அதன்பொருட்டு குறிப்பிட்ட பாரம்பரியங்களையும் நாம் உருவாக்கினோம். தஞ்சைப் பகுதிகளுக்குச் சென்றால், சிவனுக்கென்று நூற்றுக்கணக்கான கோவில்கள் உள்ளன. ஆனால், ஒவ்வொன்றும் வித்தியாசமாக இருக்கின்றன.

அவரை ஒரு மருத்துவராக உருவகிக்கும் இடம் வைத்தீஸ்வரன் கோவில். வைத்தீஸ்வரன் கோவிலில் சிவன் இங்கே ஒரு மருத்துவராக அமர்ந்துள்ளார். ஆகவே அந்தப் பாரம்பரியம் - அவர்கள் பயன்படுத்தும் மந்திரங்களின் விதம், சடங்குகளின் விதம், அவருடன் அவர்கள் என்ன செய்கின்றனர் - அது தொடர்ந்து பராமரிக்கப்பட்டுள்ளது. அதற்காகவே சில குடும்பங்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதுடன், ஆயிரக்கணக்கான வருடங்களாக அதை பராமரித்து வந்துள்ளனர். இப்போது கடந்த 20ம் நூற்றாண்டின் இறுதிகளில் மற்றும் 21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் இந்தப் பாரம்பரியங்கள் சீர்குலைந்து கொண்டிருக்கின்றன.

இந்த விதமாக வடிவங்களை உருவாக்கியதனால் மக்களால் அதைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. முக்கியமாக, கோடிக்கணக்கான வழிகளில் வெளிப்பாடு காணும் படைப்பின் மூலத்தை நாம் இங்கே முன்னிலைப்படுத்துகிறோம். சிவனின் கோடிக்கணக்கான வடிவங்களை உருவாக்குவதற்கு நமக்குக் காலம் போதாத காரணத்தால், ஒரு சில ஆயிரம் வடிவங்களை மட்டும் உருவாக்கியுள்ளோம். மக்களுக்கு உலக வாழ்க்கையில் ஆரோக்கியம் தேவை, நல்வாழ்வு தேவை, வெற்றி தேவை, அவர்களுக்கு முக்தியும் தேவையானது தான். முதலில் கூறிய மூன்றும் கிடைத்து விட்டால், பிறகு அவர்கள் முக்தியைத் தேடுகின்றனர். அதனால் நமக்கு முக்தீஷ்வரர், யுக்தீஷ்வரர் இருக்கின்றனர். நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ அதற்கேற்ற விதமான சிவனின் வடிவத்தை நாடுகிறீர்கள்.



Scanned with CamScanner

அப்படியென்றால், எங்கேயோ உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவராக இவர் இருக்கிறாரா? இது யாரோ ஒருவரைப் பற்றி அல்ல. எந்த ஒருவர் மீதும் நமக்கு ஆர்வமில்லை. படைப்பிற்கு அடிப்படையாக இருக்கும் ஒரு பரிணாமத்தைப்

பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். வாழ்வின் ஒரு குறிப்பிட்ட அம்சத்திற்கு ஒரு குறிப்பிட்ட அதிர்வலையை, ஒரு குறிப்பிட்ட வடிவத்தை வழங்கும் விஞ்ஞானத்தை நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

வாழ்வின் ஒரு குறிப்பிட்ட அம்சம் ஒரு உயிரோட்டமான வடிவமாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அந்த வடிவம் சிவாவின் வடிவமாக குறிப்பிடப்படுகிறது. மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக இது உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு குறிப்பிட்ட விதத்தில் வெளிப்படுத்தப்பட்ட, ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பமாகவே இருக்கிறது. இது தன்னியல்பான ஒரு தொழில்நுட்பமாக இருக்கும் காரணத்தால், அதை நீங்கள் உணர வேண்டுமென்றால், நீங்கள் ஒரு குறிப்பிட்ட தன்மையில் இருக்கவேண்டும். இல்லையென்றால் நீங்கள் அதை உணரமாட்டீர்கள்.

“ஜகமே தந்திரம், சுகமே மந்திரம், மனிதன் யந்திரம் சிவ சம்போ…”
மனதின் குவிப்பு (focus) மூன்று விதமானது. மந்திரம்... தந்திரம்..... யந்திரம்...

வார்த்தைகள்.... மந்திரம்

உருவங்கள்/சித்திரங்கள்... யந்திரம்...

உருவமற்ற ... பயிற்சி முறை... தந்திரம்..

“நெஞ்சம் ஆலயம், நினைவே தேவதை, தினமும் நாடகம் சிவ சம்போ...”
தாயுமானவர் தம் பராபரக்கண்ணியில், தான்செய்யும் இறைவழிபாட்டை,

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே”
(பராபரக்கண்ணி -151) என்று கூறுகிறார்.

மனிதா உன் எண்ணத்தில் எந்நாளும் நன்நாளாம்;
மறு நாளை எண்ணாதே, இந்நாளே பொன் நாளாம்;”
நாளென்ன செய்யும் கோளென்ன செய்யும்... எனும் பதிகத்திற்கான வரிகள் இவை.

“பல்லாக்கை தூக்காதே, பல்லாக்கில் நீ ஏறு” இது ஒரு குறள் கருத்து.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

மனதால் நேர்மையுடன் இருப்பதே அறம், அப்படி அறத்துடன் இருப்பவர்க்கு செல்வமும், சிறப்பும் வளரும், மறுப்பவர் வாழ்வில் விழ்ச்சி உறுதி. அழிக்கும் குணம்,அளவற்ற ஆசை,கடுங்கோபம்,வன்மையான வார்த்தை இவை நான்கும் இல்லாமல் இருப்பதே அறம். அடுத்தவர் மதிக்கப்பட வேண்டும் என்று அறத்தை செய்யாமல் தனக்காக செய்யவேண்டும். அடிமையாக இருப்பது அறமாகாது. அறமே இன்பத்தை தரும்.

“உன் ஆயுள் தொண்ணூறு எந்நாளும் பதினாறு ...
என... உற்சாகமாக இரு..”

ரம் டம் த ரி த ரி ...

“அப்பாவும் தாத்தாவும் வந்தார்கள் போனார்கள்;”

இது பாரதி பாடல்...

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என் வாயுற வாழ்த்தேனோ? -

“தப்பென்ன சரி என்ன எப்போதும் விளையாடு;”



Scanned with CamScanner

எது சரி... தவறென்று முடிவெடுப்பதிலேயே மனிதனின் ஆயுள் முடிந்துவிடுகிறது...அது தவிர்த்து....முன்னேறு...வாழ்வில் மோதி விளையாடு ...

"அப்பாவி என்பார்கள் தப்பாக நினைக்காதே;"

இப்படிச் சொன்னால் அப்பாவி என்பார்கள்....நெக்லெக்ட் இட் ..

"எப்பாதை போனாலும் இன்பத்தை தள்ளாதே..."

இன்பமே.... இறைபாதம் சேருவதே.

"கல்லை நீ தின்றாலும் செரிக்கின்ற நாள் இன்று;"

கலியுகத்தில் கல்... மண் உணவாகும் ...

"காலங்கள் போனாலோ தின்னாதே என்பார்கள்!"

வயதானால் உணவைக் குறை.

"மதுவுண்டு, பெண்ணுண்டு, சோறுண்டு, சுகமுண்டு,
மனமுண்டு என்றாலே சொர்கத்தில் இடம் உண்டு.."

துறவறம் நாட வேண்டாம்...இல்லறமே நல்லறம்... துய்த்த பின் துற...

இதுதாங்க கவிஞர் சொல்லீருக்காரு..

ரம் டம் த ரி த ரி ...

**-செந்தில்குமார் சுப்பிரமணியன், மைசூர்**










Scanned with CamScanner

# சோதிடம்

சோதிடம் என்றதும் ஒருவருடைய எதிர்காலத்தை கணிக்க பயன்படும் ஒரு பழங்கால முறை என்று தான் அறியப்படுகிறது, இக்காலத்தில்! விஞ்ஞான நுண்ணறிவும், தொழில்நுட்பமும் வெகுவாக வளர்ந்துள்ள போதும் சோதிடத்தின் மீதும் ஆழ்ந்த நம்பிக்கை வளர்ந்துள்ளது. தவிர, இனம்,மொழி, நாடு, கலாச்சாரம், படிப்பறிவு, பொருளாதார நிலை, நாகரீக முன்னேற்றம் கடந்து உலகமெங்கும் உள்ள மக்கள் பலர் தீவிரமாக சோதிடத்தை நம்புகிறவர்கள் உண்டு. மேலும், பலருக்கு, சோதிடம் என்பது முழுமையாக நம்பமுடியாத முறை என்றும், மாயாஜாலம் அல்லது கண்கட்டி வித்தை என்றும், மூடநம்பிக்கை என்றும் கூறுவதுண்டு. இந்த இரண்டு முரண்பாடான கருத்துக்களும் தவறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.




இந்த முரண்பாடான கருத்துக்களில் இருந்து மீள்வதற்கு நாம் சோதிடம் எதற்கு, எப்போது, எப்படி உருவாயிற்று என்பதை தெரிந்துகொள்வது அவசியம். மேலும், பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் தோன்றிய இந்த சோதிடம் என்கிற அறிவியற்கலை எவ்வாறு இன்றுள்ள நிலையை எட்டியது என்பதையும் புரிந்துகொள்ளும் போது, சரியான முறையிலும், அளவிலும் பயன்படுத்தி பயனடைய முடியும். சோதிடம் மட்டுமல்லாது எந்த ஒரு கலையையும், கருவியையும், கண்டுபிடிப்புக்களுக்கும் மேற்கூறிய கருத்து பொருந்தும் என்பது என் ஆழமான நம்பிக்கை.

இதன் அடிப்படையில், சோதிடம் உருவான நோக்கத்தை அறிய முற்படுவோம், பின்வரும் பத்திகளில்! கேட்டு, படித்து, பார்த்து, விவாதித்து, எம் அறிவுக்கு எட்டியவற்றை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சி. மாறிமாறி வரும் வெளிச்சம், இருட்டு;வெப்பம், குளிர் போன்ற விஷயங்களை கண்ட ஆதிகால மனிதன், இவற்றிற்கான காரணம் வானத்தின் மீது தோன்றி மறையும் நெருப்புப் பந்தான சூரியன் என அறிந்தான். பிறகு, இந்த சூரியன் ஓரிடத்தில் தோன்றி, ஒரு பாதையில் நகர்ந்து வேறொரு இடத்தில் மறைவதே மாற்றங்களுக்கு காரணம் என்றறிந்து, பகல் மற்றும் இரவை கண்டுபிடித்தான்.

இந்த நிகழ்வே, தான் இருக்கும் இடமான பூமியில் உள்ள அனைத்து மாற்றங்களுக்கும், சீற்றங்களுக்குமான காரணம் என்றும் அறிந்தான். சூரியனின் இந்த சீரான நகர்வை குறிக்கவே காலம், நேரம் என்பதை கண்டுபிடித்தான். கால அளவீடுகளை விநாடி, நிமிடம், நாழிகை, மணி என்று வகைப்படுத்தி, சூரியனின் தோற்றத்திலிருந்து நகர்வு, பின் மறைந்து, மீண்டும் தோன்றுவதை ஒரு நாள் என்றும் கணித்தான். ஒரு நாளைக்கு 60 நாழிகைகளும், ஒரு நாழிக்கைக்கு 24 நிமிடங்களும் என்றும் அளவீடு கொடுக்கப்பட்டது. இந்த அளவீடு மற்ற பல கணக்கீடுகளுடன் தொடர்பு உடையவை என அறியும் போது பிரமிப்பாக உள்ளது!

ஆக, சோதிடத்தின் முதல் கிரகம் சூரியன், இன்றளவும் இப்பூமியின் காலத்தை நிர்ணயிக்கிறது. மேலும், இரவில் தோன்றும் நிலவையும், பிரகாசித்த நட்சத்திரக் கூட்டங்களையும், தனித்த நட்சத்திரங்களையும் கண்டு ஆராய்ந்து மற்ற கிரங்கங்களையும் கண்டுபிடித்தான். நட்சத்திரக் கூட்டங்களை வைத்து பிரபஞ்சத்தில் திசைகளையும், இடங்களையும் குறித்து சூரியன் முதலான ஏழு கிரங்கங்களின் நிலை, நகர்வு, தொடர்பு முதலியவற்றை கண்டறிந்தான். இந்த புரிதலாலும், மற்ற கணக்கீடுகளில் இருந்தும் பூமி உருண்டையானது என்று மட்டுமில்லாது, எல்லா கிரகங்களும் உருண்டையானது என்றும், சூரியனை மையத்தில் அச்சாக கொண்டு மற்ற எல்லா கிரங்களும் சூரியனை வட்டபாதையில் சுற்றி வருகிறது என்றும் அறிந்தான்.



Scanned with CamScanner

அடுத்து, இரவில் ஒளிர்ந்து பகலில் மறையும் கிரகம், சந்திரன். அதிலிருந்து வரும் ஒளி சூரிய ஒளியின் பிரதிபலிப்பு, பூமிக்கு மிக அருகிலும், பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ளது என்றும் அறிந்தான். சந்திரன் குறிப்பிட்ட கால

அளவில் வளர்ந்து, தேய்ந்து, மறைவதை கணக்கிட்டு, சந்திரன் மட்டுமே பூமியை அச்சாக கொண்டு பூமியை சுற்றிவருகிறது என்றும், அதற்கு 30 நாட்கள் ஆகிறது என்பதையும் கண்டுபிடித்து, இக்கால அளவை ஒரு மாதம் என்று கணித்தான். மேலும், முழுமையாக தெரியும் சந்திரன் முழுவதும் மறைவதற்கு 15 நாட்களும், மீண்டும் முழுமையாக தோன்ற மற்றொரு 15 நாட்களும் என்றறிந்தான்.

நாம் இருக்கும் பூமியில் ஏற்படும் தட்பவெட்ப நிலை மாறுதல், மழை, புயல், சூறாவளி, கடல் கொந்தளிப்பு, வறட்சி, அதிகமான வெட்பம் மற்றும் பல இயற்கை மாற்றங்களுக்கும் இந்த கிரங்களின் சுழற்சிக்குமான தொடர்புகளை ஆராய்ந்து அறியத் தொடங்கினான். குறிப்பாக, தட்பவெட்ப நிலை மாறுதல்கள் குறிப்பிட்ட கால அளவில் தொடர்ந்து சுழற்சியாக நடைபெறுவதை கணக்கிட்டு தெரிந்து கொண்டான். இதன் காரணம், பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தொடர்பை மேலும் புரிந்துகொள்ள வழிவகுத்து, பூமி சூரியனை சுற்றிவருகிறது என்றும், அதற்கான கால அளவு 12 மாதங்கள் அல்லது 365 நாட்கள் என்பதை நிர்ணயம் செய்தது. ஆச்சர்யம் என்னவென்றால், இந்த 365 நாட்களுக்கும், வட்டத்தில் உள்ள 360 பாகைக்கும் உள்ள தொடர்பு!

இவ்வாறாக, தொடங்கிய வான சாத்திரம் என்கிற சோதிடம், மேலும் பல கணக்கீடுகள், தொடர்புகள் கொண்டு பல்வேறு கால அளவீடுகளை வகுத்தது. இவற்றில், உலகமெங்கும் பயன்படுத்தும் ஒரு நாளைக்கு 24 மணிநேரம், வாரத்தின் ஏழு நாட்களும், அதன் பெயர் மற்றும் வரிசை; 12 ராசிகள் அல்லது மாதங்கள்; கோடை, வசந்த, இலையுதிர் மற்றும் குளிர்காலம் என்கிற நான்கு பருவங்கள் போன்றவை. தவிர, இந்தியாவிலும், இந்தியர்களாலும் பயன்படுத்தப்படும் 'பஞ்சாங்கம்' என்பது காலத்தின் அட்டவணை மட்டுமல்லாது, மனித வாழ்வில் அன்றாடமும், அவ்வப்போதும் நடைபெற வேண்டிய காரியங்களை செய்ய சரியான நாட்களை, நேரத்தை வகைப்படுத்தி கூறுவதாகும். மேலும், கிரக நகர்வுகளையும், இருப்பிடத்தையும், அவற்றின் தொடர்புகளை கணக்கிட்டு உலகில் நிகழ வாய்ப்புள்ள இயற்கை சீற்றங்களையும் உள்ளக்கிடயதே.



*<u>சிறு குறிப்பு</u>*... 24 நிமிடம் கொண்ட ஒரு நாழிகை, 60 நாழிகை கொண்ட ஒரு நாள், இப்போது 60 நிமிடம் கொண்ட ஒரு மணி, 24 மணி கொண்ட நாளாக மாறிவிட்டது. முந்தைய காலத்தில், இரண்டரை (2.5) நாழிகை கொண்ட 60 நிமிட காலத்திற்கு, ஹோரை என்றிருந்தது. இந்த ஹோரை என்ற கால அளவே இன்று நாம் பயன்படுத்தும் **ஹவர்** (Hour)! ஆக, காலத்தையும், காலத்தால் ஏற்படும் மாற்றங்களையும் கணிக்க உருவானதே சோதிடம்! இந்த
அறிவியற்கலையானது, மேலும் வளர்ந்து, இயற்கையை மட்டுமில்லாது, எவ்வாறு உலகிளுள்ள எல்லாவற்றின் மீதும், குறிப்பாக, மனித உயிர்கள், எண்ணங்கள் மற்றும் செயல்கள் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தையும், இந்த காலமாற்றத்துக்கும் ஆன தொடர்புகளையும் கண்டறிந்தது. இன்னும் கூட பல ஆய்வுகளும் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் தோன்றினாலும், இன்றளவும் உலகளவில் நவீன விஞ்ஞான முறைகள் உட்பட, எல்லா தரப்பினராலும் அன்றாடம் நடைமுறையில் பயன்படுத்தும் கால அளவீடுகளை தந்தது சோதிடம்! அதன் பின் தோன்றிய, மொழிகள், மதங்கள், சித்தாந்தங்கள், நிலப்பரப்புகள் போன்றவைகளுக்கு உண்டான மாறுதல்கள், இடர்கள், முன்னேற்றங்கள், மோதல்கள் சோதிடத்திற்கும் உண்டானது. இருப்பினும், மேற்கூறிய பலவும, காலப்போக்கில் சிதைந்தாலும் தமிழும், சோதிடமும் காலம் கடந்து நிற்பது தமிழர்க்கு பெருமை சேர்ப்பது. சோதிடத்தின் வளர்ச்சி பாதையில், இயற்கையின் மாற்றங்கள் மட்டுமல்லாது, மனிதனின் வாழ்வில் உண்டாகும் மாற்றங்களையும் கணிக்க முடியும் என்பது தெளிவாகியது. ஆனால், ஆரம்பகாலத்தில் தனிமனிதனுக்கான மாற்றங்களை, அதாவது, எதிர்காலத்தைக் கணிப்பது என்பது வெகு குறைவு. அரசன், செல்வந்தர் போன்றவர்களுக்கு மட்டுமே கணித்தனர், காரணம்,இவர்களின் எதிர்காலம் இவர்களை சார்ந்த வெகுஜன மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும் என்பதால். எவ்வாறு வெகுஜன மக்களிடையே பரவியது என்பதற்கும் சில சரித்திரங்கள் உண்டு. ஒரு கருத்து அல்லது முறை உலகில் பிரபலமாகும் போதுதான் அதற்கு எதிரான




Scanned with CamScanner

கருத்துக்கள் மற்றும் எதிர்வினை ஆற்றலும் தீவிரமடையும். கடந்த நூற்றாண்டில் தான், சோதிடம் என்பது தனிமனித வாழ்வின் எதிர்காலத்தை கணித்து சொல்லும் முறை என்று பிரபலமாக்கப்பட்டு, சோதிடத்திற்கான எதிர் கருத்துக்களும், எதிர்வினையாற்றலும் உருவாகி அதிகரித்துள்ளது.இன்றைய நவீன உலகிலும், உலகமெங்கிலும் உபயோகத்தில் இருக்கும் கால அளவீடுகள் அத்தனைக்கும் மூலம் சோதிடமே என்பது மறைக்கப்பட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட மின்னணு மற்றும் தகவல், தொலைதொடர்பு தொழில்நுட்ப முன்னேற்றத்தால் சோதிடம் வெகுஜன மக்களிடையில் இன்னும் வேகமாக பரவியது. எதிர்காலத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வம் மிகுந்தது. மக்களின் ஆர்வம் மற்றும் தேவை அதிகமாக, சோதிடம் கணிப்பவர்களும் அதிகமாயினர். ஆனால், முறையான சோதிடத்தை போதிப்பதற்கு வழிமுறையும், பயன்படுத்த கட்டுபாடும் இல்லாததால், பலர் சோதிடர்களாக மாறினர். முறையான கற்றல் இல்லாமல் பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்பட்டு தவறான கணிப்புகளும், மாறுபட்ட கணிப்புகளும், உறுதி செய்யப்படாத புதிய முறைகளும், விதிகளும் மக்களிடையே, சோதிடத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியது. இன்று, பல தொழில்முறை சோதிடர்களுக்கு, சோதிடத்தின் அடிப்படையும் ஆதாரமுமான கால அளவீடுகள் மற்றும் அதன் கணக்கீடுகளும் தெரிவதில்லை. 27 நட்சத்திரங்கள், 9 கிரகங்கள், 12 ராசிகள் மற்றும் இவற்றின் தன்மைகளும், சில விதிகளையும் மட்டுமே தெரிந்து வைத்துக்கொண்டு, எதிர்கால பலன் கணிப்பதும், தன்னை ஒரு சோதிடர் என்று கூறிக்கொள்வதும், இன்றைய சோதிடத்தின் நிலையாக உள்ளது, வருந்தத்தக்கது!

**-எம். ஜி. ஆர். கணேசன்**







Scanned with CamScanner

# வாசிப்பை நேசிப்போம்

தமிழ் மொழி வாசிப்பை வளப்படுத்த வேண்டும் என்பது தான் தமிழ்ப்பள்ளிகளின் நோக்கமாக உள்ளது. ஆனால் இப்போதைய அவசரயுகத்தில் வாசிப்பு என்பதே குறைந்து வருகிறது என்பது மிக வருந்தத்தக்க நிலை. பள்ளிபருவத்தில் உள்ள நம் குழந்தைகள் அமெரிக்கப் பள்ளி பாடத்திட்ட வடிவமைப்பால் அதிகம் வாசிக்கும் வாய்ப்பை பெறுகிறார்கள். ஆனால் பெற்றோர்களாகிய நாம் தினமும் எவ்வளவு நிமிடங்கள் வாசிப்பதற்கு செலவு செய்கிறோம் என்று நினைத்துப் பார்த்தால், அந்த எண்ணிக்கை மிகக் குறைவு தான். அதனால் முதலில் வாசிப்பு(ஏதேனும் ஒரு மொழியில்) அடுத்து தாய்மொழி வாசிப்பு என்று ஊக்கப்படுத்தும் வகையில் இந்த இதழ் முதல் வாசிப்பு பகிர்வை தொடங்குகிறோம்.



மேலும் தங்கள் தொழில் சார்ந்த வாசிப்பு, மேலாண்மை (management), ஆளுமை வளர்ச்சி (personality development) முதலிய அன்றாட வாழ்க்கைக்கு, முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான நூல் வாசிப்பு, அத்தகைய நூல்களின் அறிமுகம் முதலியனவும் தமிழ்ச்சாரல் இதழுக்கு வளம் சேர்க்கும் என்றே கருதுகிறோம். தமிழ்ச்சாரல் இதழை பன்முக கொண்டதாக அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் என்றும் நம்புகிறோம். தமிழ் நூல் வாசிப்பின் முதல் படியாக இது அமையும் என்ற எண்ணத்தில் தொடங்குகிறோம், உங்கள் ஆதரவும் இது குறித்த உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகிறது.

தமிழ்ச்சாரல் ஆசிரியர் 2023
மற்றும்
துணையாசிரியர்






Scanned with CamScanner

நூலின் பெயர்: With the Photographer

நூலாசிரியர்: Stephen Leacock

பதிப்பிக்கப்பட்ட ஆண்டு: 1913



ஒரு சமயம் புகைப்படம் எடுப்பதில் தற்போது உள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தோம். குறிப்பாக, முகபாவங்களை மேம்படுத்தும் அம்சங்களைப் பற்றி, பேசும் போது, நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது வாசித்த ஒரு நூல் நினைவிற்கு வந்தது. இந்நூல் 1913ஆம் ஆண்டு வெளியான பழைய நூல் என்றாலும், இக்கதையின் கரு தற்கால நவீன காலத்திற்கு பொருத்தமானதாக இருந்தது.

ஒருவர் புகைப்பட ஸ்டூடியோவிற்குச் சென்று தன்னைப் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்புவதும், அப்போது அவருக்கும் புகைப்படக் கலைஞருக்கும் இடையே நடக்கும் உரையாடலுமே இக்கதையின் களமாகும். கதையின் போக்கு, மிகவும் ரசிக்கத்தக்கதாகவும் வேடிக்கையாகவும் அமைந்திருந்தது.

கதையின் நாயகன் தன் உருவத்தை புகைப்படமாக எடுக்க விரும்பி ஒரு ஸ்டூடியோவிற்கு செல்கிறார். அவரின் தோற்றம் புகைப்படக்காரருக்கு பெரிய ஈர்ப்பைத் தரவில்லை. அவர் எதிர்மறையாக பேசத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் கதாநாயகன் மனம் வருத்தமடைந்து அங்கிருந்து கிளம்ப எண்ணினார். புகைப்படக்காரர், "நான் உங்களை புகைப்படம் எடுக்கிறேன், அதை ஒரு வாரத்தில் வந்து பெற்றுகொள்ளுங்கள்" எனக் கூறினார்.

ஒரு வாரம் கழித்து, கதையின் நாயகன் தன் புகைப்படத்தை வாங்க ஸ்டூடியோவிற்கு வந்தார். புகைப்படக்காரர் சில தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட தன்னுடைய உருவத்தின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்தியிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து விட்டார்.

ஆனால், புகைப்படக் கலைஞரோ, தனது தொழில்நுட்பத் திறனை கண்டு அடைந்த பெருமைக்கு அளவேயில்லை. இந்தப் புகைப்படம், அந்த கலைஞரின் சிறந்த நுண்ணிய கலைப்படைப்புகளில் ஒன்று போல் இருந்தது. அதை வாங்கிச் செல்ல கதாநாயகன் விரும்பவில்லை. ஏனெனில், அவர் விரும்பியது என்னவென்றால், அவரின் காலத்திற்குப் பிறகு, அவரது குடும்பத்தினர் நினைவில் வைத்திருக்கும் அவரது உண்மையான உருவத்தைப் பிரதிபலிக்கும் படத்தை தான் என்று இறுதியாக புகைப்படக்காரரிடம் கூறிச் சென்று விடுகிறார்.




"எந்தவொரு நகல்களையும் விட அசல் மதிப்பு மிக்கது", என்று நூலின் இறுதியில் உரத்து வரும் செய்தி மிகவும் உண்மையான தெளிவான ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

செந்தில் ஆற்காட்



Scanned with CamScanner

நூலின் பெயர் : யானை டாக்டர்
நூலின் ஆசிரியர்: திரு.ஜெயமோகன்




ஜெயமோகன் அவர்களின் "யானை டாக்டர்" என்ற சிறுகதை, கால்நடை டாக்டர் கிருஷ்ணமூர்த்திஅவர்களின் உண்மைக் கதையினை அடிப்படையாக வைத்து புனையப்பட்டது. தனது வேலையை நேசிக்கும் ஒருவர், தான் வாழும் சூழலையும், தன்னுடன் வாழும் விலங்குகளையும் மனிதர்களையும் எப்படி அறிந்து அவர்களுடன் கூடி வாழலாம் என்பதை டாக்டர் K அவர்களின் வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது.

நாம் யானைகளுக்கு காசு கொடுத்து துதிக்கையில் ஆசி பெறுவதோடு அதனுடனான பழக்கம் முடிந்து விடுகிறது. ஏதோ கும்கி போன்ற படங்களின் புண்ணியத்தில் யானையைப் பற்றி ஓரிரண்டு விஷயங்கள் அறிகிறோம். யானை என்பது எவ்வளவு புத்திசாலியான உயிரினம், காடுகளில் யானைகள் எப்படி கூடி வாழ்கின்றன என்பதனை இந்தக் கதை அழகாக விவரிக்கிறது.

மகிழ்ச்சி என்ற பெயரில், மனிதர்கள் காட்டிற்கும், காட்டில் வாழும் விலங்குகளுக்கும் எவ்வளவு தீங்கு இழைக்கிறார்கள் என்று இந்நூல் எடுத்துரைக்கும் போது, நம் மீதே நமக்கு எரிச்சல் உருவாகிறது. நமக்கு ஆறறிவு இருக்கிறது என்று பெருமிதம் கொள்ளும் வேளையில் யானைகளும், செந்நாய்களும் தனது சொந்தங்களுக்கு ஒரு நோவு என்றால் எப்படி நடந்து கொள்கின்றன என்பதை அறியும் பொழுது வியப்பாக இருக்கிறது. ஜெயமோகன் அவர்களின் வரிகளைப் பற்றியும், விஷயங்களை அவர் விவரிப்பதைப் பற்றியும் நான் புதிதாக சொல்வதற்கு என்ன இருக்கிறது. அவர் காடுகளைப் பற்றியும், டாப் ஸ்லிப் இடத்தைப் பற்றியும் விளக்கும்போது, அந்த இடத்தில் நாமே நிற்பது போல சிலு சிலுவென இருக்கிறது. அவர் செந்நாய்களுடனான காட்சியை விவரிக்கும் போது, அடுத்து என்ன நடக்குமோ என்று படிக்கும் போதே படபடப்பு உண்டாகிறது. யானைகளின் பிரேதப் பரிசோதனையில் நெளியும் புழுக்கள் அவ்வப்போது கண்முன்னே வந்து போகிறது.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும் வரை டாக்டர் K பற்றி நான் அறிந்து இருக்கவில்லை. இன்று இந்தியாவில் யானைகளுக்கு வாழ்வு முறை ஓரளவுக்கேனும் மேம்பட்டு இருக்கிறது என்றால், அதற்கு முழுமுதல் காரணம் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்களே என்று கண்கூடாகத் தெரிகிறது. அவரது ஆராய்ச்சி கட்டுரைகள் சர்வதேச அளவில் பிரபலமாக இருந்தாலும், விலங்கியல் துறையில் ஒரு முக்கியமான மனிதராக உலக அரங்கில் அறியப்பட்டாலும், நாம் சினிமாக்காரர்களையும், கிரிக்கெட் விளையாட்டு வீரர்களையும் கொண்டாடுவதில் ஒரு சதவீதம் கூட இவர்களைப் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுவது இல்லை. ஜெயமோகன் அவர்கள் இவருக்கு இந்திய அரசின் அங்கீகாரம் கிடைக்காததை அடிக்கோடிட்டு காண்பிக்கிறார். இன்று அரசு விருதுகள், கொடுக்கப்படுவது இல்லை, "வாங்கப்படுகிறது" என்பதை இந்தக் கதையின் மூலம் சுட்டி இல்லை குட்டிக் காண்பிக்கிறார்.

இந்தப் புத்தகம் தன்னறம் நூல்வெளிப் பதிப்பில் 50 ரூபாய்க்கு தமிழக புத்தகக் கடைகளில் கிடைக்கிறது. ஜெயமோகன் அவர்களின் மற்ற பதிவுகளைப் போல, இந்தச் சிறுகதையும், https://www.jeyamohan.in/12435/ என்ற அவரது வலைமனையில் கிடைக்கிறது. உங்களுக்குப் புத்தகம் படிக்கும் பொறுமையோ பழக்கமோ இல்லை என்றாலும், https://www.youtube.com/watch?v=ZR_Xmckmet8 வலைமனையில் பவா செல்லத்துரை இந்தக் கதையினை அழகாக விளக்கிச் சொல்கிறார். கேட்டுப் பாருங்கள்.



**விஷிராமன், பியர்லேண்ட்**



Scanned with CamScanner

நூலின் பெயர் : சிலிர்ப்பு
நூலின் ஆசிரியர்: திரு.தி.ஜானகிராமன்




மூன்று வருடங்களுக்கு முன்பு, எனது தோழி கூற எனக்கு தெரிய வந்தது, திரு.ராஜா (பட்டிமன்ற பேச்சாளர்) அவர்களது வலையொளி மற்றும் அதில், திருமதி. பாரதி பாஸ்கர் அவர்கள் புகழ்பெற்ற சிறுகதைகளை வாசிக்கும் பேருதவியை செய்து வருவது. புத்தகங்கள் வாசிப்பதின்பால் புதிதாய் பிறந்த காதலினால்,இந்த யூடிப்சானலில் என்னை இணைத்துக் கொண்டு கதைகள் கேட்க தொடங்கினேன்.

மாலைக்குள் இரு கதைகள் கேட்டு முடித்திருந்தேன். நேரம் கடந்து பின்னிரவைத் தொட்டது. திரு.தி.ஜானகிராமன் 1953-ல் எழுதிய ‘சிலிர்ப்பு’ கதையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஏறத்தாழ இக்கதைக்கு 70 வயது நிரம்ப காத்திருக்கிறது. இந்த வயதிலும், படித்தவர் (படிக்க கேட்டவர்) மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றால், அது எடுத்தப் பிறவிக்கு பயன் சேர்த்துக்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

திருமதி. பாரதி பாஸ்கர் இக்கதையை 10 முறைக்கு மேல் படித்திருக்கிறாராம். இன்று அவர் படித்து முடித்தப் போதும், முதன்முறை கேட்ட என் விழிகள் போல் அவர் குரல்-விழி கலங்கியிருந்தன.

கதையின் நாயகன் தன் 6 வயது பிள்ளையுடன் பெங்களூரிலிருந்து கும்பகோணத்திற்கு செல்லும் ரயில் பயணத்தில், திருச்சி சந்திப்பில் (Junction), 10 வயது பெண்ணை சந்திக்கிறார். அவளது வாழ்க்கை,வறுமையின் காரணமாய் மேற்கொள்ளப்போகும் நீண்டப் பயணத்தை பற்றி அறிய வரும் வேளையில், தனக்குள் நேர்ந்த வலியையும்,தன் பிள்ளை முடிவில் செய்த செய்கையால் சிலிர்த்த நொடிகளையும் பதிவு செய்திருப்பார்.

அந்த பெண் பெயர் காமாட்சி. அவளை வர்ணித்த போதும், அவள் குடும்ப சூழல் பற்றி விவரித்த போதும், என் மனதில், 20 வருடங்களுக்கு முன்னால், எங்கள் வீட்டில் வேலை செய்த செல்வி அக்கா மற்றும் அவரது 5 பெண் பிள்ளைகள்தான் நினைவுக்கு வந்தார்கள்.

செல்வி அக்காவின் இரண்டாம் பிள்ளையின் - பெயர்,மாரியம்மாள். கிட்டத்தட்ட இக்கதையில் வரும் காமாட்சியை போன்றேதே அவளது உருவம். செல்வி அக்காவிற்கு வருடத்திற்கு ஒரு பிள்ளை பெறுவது வாடிக்கையாயிருந்தது. கேலி பேசவில்லை.அவர்களது சூழல் அப்படி. புருசன், ரிக்ஷாக்காரன். பகலில் பாவங்கள் சுமக்கும் மனிதர்களை சுமப்பவன், இரவின் சுமையை, கட்டியவள் வயிற்றில் கூட்டுகிறான்-வறுமையின் பிடியிலிருப்பவர்களின் ஒரே மனச்சோர்வு நீக்கி இது தானே! விளைவு காமாட்சியை போன்ற வாழ்க்கையை ஏற்கும் நிலையில், பெற்ற பிள்ளைகள்.

செல்வி அக்கா வராத நாட்களில், வீட்டு வேலைகளை செய்ய எங்கள் வீட்டிற்கு வருவாள் மாரி.சில சமயங்களில் அவளது அக்காவும் வருவதுண்டு. அப்போது எனக்கு 12 வயதிருக்கும். மாரிக்கு ஏறத்தாழ 8 அல்லது 9 வயதிருந்திருக்கக்கூடும். நான் கட்டிலில் படுத்திருக்க, அல்லது இருக்கையில் டிவி பார்த்துக்கொண்டிருக்க, அவள் வீட்டை கூட்டி சுத்தம் செய்ததை இப்போது நினைக்கையில்,என் மேல் எனக்கே கோபம் வருகிறது, அருவருப்பாயிருக்கிறது. ஆனால் நான் அந்த வயதிலேயே செல்வி அக்காவிடம் சொன்னதுண்டு - அக்கா பிள்ளைகளை வேலைக்கு அனுப்பாதீர்கள்,அது தப்பு என்று. என் அப்பாவிடமும் சொன்னதுண்டு,வேலையை விட்டு நிறுத்துங்கள் என்று. கருத்துக்கள் மிக தாமதமாய் சபையேறியது.

அப்போது நினைத்ததுமுண்டு அந்த பிள்ளைகளுக்கும் நம்மை போன்ற ஆசைகள் எல்லாம் இருக்குமல்லவா என்று. சில நாட்களில் நானும் மாரியும்,அவளின் அக்கா ஈஸ்வரியும் சேர்ந்துக்கொண்டு படங்கள் பார்த்ததுண்டு. காதல், காமெடி வசனங்களுக்கு அவர்கள் சிரித்ததை பார்த்து நான் மகிழ்ந்ததுமுண்டு. ஆதலால் நான் சமத்துவம் பழகியவள்



Scanned with CamScanner

என்றெல்லாம் பொய் கூறமாட்டேன். முதலாளித்துவ பாதிப்பு எனக்குமிருந்ததால்தான் மேற்கூறிய அருவருப்பு உணர்வுக்கு தள்ளப்பட்டேன். அந்த குற்ற உணர்வினால்தான், இந்த கதையை படித்தபின் என்னால் கடந்துபோக இயலவில்லை என்றே தோன்றுகிறது.

கதையில் (உண்மையில் ஆசிரியர் பெற்ற அனுபவமே கதையாயிருக்கக்கூடும் என்று நினைக்கிறேன்) ஒரு கட்டத்தில், நாயகன் இரு பிள்ளைகளையும் ரயில்வே ஸ்டேஷன் ஹோட்டலில் சாப்பிட வைத்துக்கொண்டிருப்பார். அப்போது அவர் ஒரு வரி கூறியிருப்பார். "இரண்டு அனாதைகள் உண்ணுகின்றனர்"என்று. ஆம், அவரை பொருத்தமட்டில் தாயை விட்டு பிரிந்திருந்த தன் பிள்ளையும் அவருக்கு அனாதையாய் தெரிந்திருக்கிறான்.
மேலும் அடுத்த வரியாய் அவர் வடித்திருந்ததே என் கண்கள் வடித்ததற்கு காரணம். "ஒரு அனாதை தன் தாய் இருக்கும் திசை நோக்கி பயணிக்கிறது, ஒரு அனாதை தன் தாய் விட்டு எதிர்திசையில் பயணிக்கிறது" என்ற அர்த்தத்தில் அவ்வரிகள் அமைந்திருந்தன. காமாட்சியின் இடத்தில் ஒரு நிமிடம் என்னை வைத்து பார்த்தேன், என் இதயம் கனத்தது. ஆனால் காமாட்சியோ, உண்ணும் வேளையில், அந்த வேகாத ரயில்வே ஹோட்டல் (1953-லும் அதே நிலைமைதான் போலும்) சோற்றை தன் கைகளால் பிசைந்து அந்த 6 வயது சிறுவனுக்கு ஊற்றி,வாய் துடைச்சுவிட்டு ஒரு தாய் ஸ்தானத்தை அடைகிறாள். பின்பு கைப்பிடித்து ரயிலேறி அமர்ந்தவளாய், எதார்த்தமாய் தனக்கு அமைந்த வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொண்டவளாய் காட்சியில் விரிகிறாள். அவளது நெடுந்தூர பயணத்தை (கல்கத்தாவிற்கு, முன்பு வேலை செய்து கொண்டிருந்த எசமானருக்கு தெரிந்த ஒருவர் வீட்டுக்கு, அவர் குழந்தையை பார்த்துக்கொள்ள, சென்றுக்கொண்டிருக்கிறாள்) புரிந்து கொண்டு, அந்த சிறுவன் ஊட்டிக் கொண்ட பாசத்தில், பதைபதைக்கிறான். கல்கத்தாவிற்கு பிள்ளை பார்த்துக்கொள்ள சென்றவள்,கண்டிப்பாக தனக்கான உறவுகளுடன் தன் வாழ்வின் பிற்பகுதியை நிம்மதியாய் வாழ்ந்துக்கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

"உலகத்தில் எதுவும் தனிச்சு இல்லையே
குழலில் ராகம் மலரில் வாசம் சேர்ந்தது போல..." (திரு.பழனிபாரதி வரிகள்)

பின்குறிப்பு:

சிலிர்ப்பு சிறுகதை பற்றிய எனது அனுபவ பதிவை படித்த எனது வாசக நண்பர் ஒருவரின் இதயம், காமாட்சியை நினைத்து கனத்த என் இதயம் போல், மாரியம்மாளை நினைத்து கனத்திருக்கிறது.
என்னிடம் அவர், 'காமாட்சியை நினைத்து கனத்த உம் இதயத்திற்கு, மாரியை பற்றிய நினைவில்லையா? மாரி தற்போது எப்படி இருக்கிறார்?' என்று கேட்டார்

மாரி மற்றும் பதிவில் குறிப்பிட்டிருந்த ஈஸ்வரி இருவரும், திருமணமாகி வெளியூரில் இருப்பதாகவும், செல்வி அக்கா, ஸ்ரீரங்கத்தில் பூ கட்டி விற்று தன் மகன் மற்றும் இரு இளைய மகள்களுடன் வசிப்பதாகவும், ரிக்ஷாகார கணவனின் வாழ்க்கை சவாரி முடிந்துவிட்டதாகவும் அவருக்கு பதிலுரைத்தேன்.

அவரின் கேள்வி நிறைவாக இருந்தது. கடைசியாய் நான் மேற்கோளிட்டிருந்த வரிகளை நினைத்துக்கொண்டேன்.

"உலகத்தில் எதுவும் தனிச்சு இல்லையே
குழலில் ராகம் மலரில் வாசம் சேர்ந்தது போல.."



– ரம்யா மனோகரன், இந்தியானாபோலிஸ்






Scanned with CamScanner

# வள்ளுவம்: அறமா, கல்வியா?!

"அறம் செய்ய விரும்பு" - ஔவையார்

ஆன்மிகம்: "அறிந்ததும், அறியாததும்" இணையதளம், அறம் என்றால் என்ன என்பதனை பின்வருமாறு உரைக்கின்றது.

- அன்பாய் இருப்பது அறம்
- இனிமையாய்ப் பேசுவது அறம்
- கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது அறம்
- நல்லதையே நாடுவது அறம்
- மனதில் குற்றமற்று இருப்பது அறம்
- பொய்யைத் தவிர்ப்பது அறம்
- சினத்தைத் தவிர்ப்பது அறம்
- பொறாமை உணர்ச்சியைத் தவிர்ப்பது அறம்
- பிறருக்குக் கெடுதல் செய்யாமை அறம்
- பிறருடன் பகிர்ந்து உண்பது அறம்
- பிற உயிர்களைக் கொல்லாமை அறம்
- தீமையில்லாத வழியில் பொருளீட்டுவது அறம்
- இல்லற வாழ்வில் ஈடுபடுவது அறம்
- அறநூல்களைக் கற்று அடக்கமுடன் இருப்பது அறம்
- தூய துறவியரைப் பேணுவது அறம்
- மானத்துடன் வாழ்வது அறம்
- உயிருக்கு ஊக்கம் தருவது அறம்
- அருள் வழியில் ஆண்டவனை உணர்த்துவது அறம்

நம் நல்வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் 133 அதிகாரங்களில் வள்ளுவர் கூறியிருக்கிறார். இதில் அவர் அதிகமாக வலியுறுத்திக் கூறுவது அறமா? கல்வியா? என்ற கேள்வி அறிஞர்கள் சபை ஒன்றில் எழுந்தது.

அறம் என்றே நான் உறுதியாகக் கூறுவேன்...

வள்ளுவம், முப்பால்களில் முதலாவதாகக் கூறுவது, 38 அதிகாரங்களைக் கொண்ட **அறத்துப்பாலையே**.
கல்விக்கென 2 அதிகாரங்கள் வள்ளுவம் சொல்கிறது. கல்வி என்னும் அதிகாரத்தில் கல்வியின் சிறப்பு குறித்தும், கல்லாமை என்னும் அதிகாரத்தில், கல்லாதார்க்கு ஏற்படும் நிலையைக் குறித்தும் திருக்குறள் கூறுகிறது.
திருவள்ளுவர் கல்வியின் சிறப்பு பற்றிப் பறையும் பொழுது,

- *கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர். -குறள் 393*

என்ற குறளில், கல்வியைக் நம் கண்ணோடு ஒப்பிடுகிறார். அதேசமயம்,

- *அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
  *மறத்தலின் ஊங்கில்லை கேடு. -குறள் 32*

என்ற குறளில் ஒருவர்க்கு ஆக்கமே அறத்தினால் வரும். அதை மறந்தால் அதனை விட ஒருவர்க்குக் கேடு, வேறு எதுவும் இல்லை என்கிறார்.

ஒருவரின் வாழ்வில், கண் இல்லை என்றாலும் அறத்தைக் கடைபிடிப்பதால், வாழ்வில் ஆக்கம் பெற முடியும் என்பதே, வள்ளுவம் உரைக்கின்றது.



Scanned with CamScanner

அது மட்டுமா, அறத்தை வள்ளுவர், திருக்குறள் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறார். எடுத்துக்காட்டாக, இன்றைய சூழலில், அமெரிக்காவானாலும், இந்தியாவானாலும், வேறு எந்த நாடானாலும், ஒரு அரசு எப்படி நடத்துவது என்று **பொருட்பாலில்**, **இறைமாட்சி** என்னும் அதிகாரத்தில் அறத்தை மையப்படுத்தியிருக்கிறார்.

- *அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
  *மானம் உடைய தரசு.* -குறள் 384

என்ற குறள், தனக்குச் சொல்லப்பட்ட அறத்திலிருந்து விலகாமல், அறமற்ற கொடுமைகள், தன் நாட்டில் நடைபெறாமல் விலக்கி, வீரத்தில் தவறாமல் நின்று மானத்தைப் பெரிதாக மதிப்பதே அரசு என்கிறது.

நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய அதிகாரம், இல்வாழ்க்கை. பயனை எதிர்நோக்கி வாழும் இக்காலத்தில், நவீன கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்ட நம் சமுதாயச் சந்ததிகள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அதிகாரம் இல்வாழ்க்கை.

- *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
  *பண்பும் பயனும் அது.* -குறள் 45

இல்வாழ்வில் அன்பும், அறமும் நிறைந்திருத்தலே, அதன் சிறப்பான குணமும், பேரின்பப் பயனும் என்று பகிர்கிறார் வள்ளுவர்.

இப்படிப் பல்வேறு இடங்களில் கல்வியைவிட, அறத்தையும், அதனைக் காத்தலின் சிறப்பையும் பற்றியுமே, வள்ளுவம் வலியுறுத்திக் கூறுகிறது,

கல்வியை வியாபாரமாகப் பார்க்கும் நிறுவனங்கள் பெருகி, மனிதம் குறைந்து காணும் நிலை உருவாகி வருகிறது. மனிதம் வளர, அறிவு தரும் நிறுவனங்கள் கல்வி அறக்கட்டளைகளாக மாறும் தருணம் எப்பொழுது?

குறிப்பு:

ஆன்மிகம்: அறிந்ததும், அறியாததும். (n.d.). https://aanmeegam.co.in/blogs/arthamulla-aanmeegam/aram-meaning/



-

**தேவி பிரபாகரன், சைப்ரெஸ்**

# துணுக்கு

ஏங்க, டாக்டர் நல்லா சிரிச்சு சிரிச்சு பேசறார் இல்ல...
ஆமாம், ஃபீஸை அட்வான்ஸா வாங்கிட்டாரே

டிபன் பண்ண ஏன் இவ்ளோ லேட்?
நெட் கனெக்ஷன் ஸ்லோவா இருக்கு.
அதுக்கும் சமையலுக்கும் என்ன சம்மந்தம்?
யூ ட்யூப் பாத்து தானே செய்யணும்....!!!

வேலக்காரி உடம்பு சரியில்லன்னு பொய் சொல்லி இருக்கா..
அது எப்டி உனக்குத் தெரியும்?
பீச்ல சுண்டல், மாங்கா சாப்டறா மாதிரி வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ் வெச்சிருக்கா!!

**பிரசன்னா வெங்கடேஷ், மும்பை**






Scanned with CamScanner

# சிறுகதை

## 2075 AD

அந்த பெரிய ஹோட்டலின் உள்ளே ரவி மெதுவாக ஊர்ந்து கொண்டு பாருக்குள் நுழைந்தான்.

"ஒரு ஸ்காட்ச்" என்று சொல்லிக்கொண்டே கண்ணை மேய விட்டான். அருகே சிகப்பு ஆடை அணிந்த இளம் பெண்ணை மெதுவாக அளந்தான். அவள் அவனை ஊடுருவி பார்த்து மெலிதாக சிரித்தாள். அருகே சென்றான்

ஐ யாம் ரவி, உன் பெயர் என்ன ?

உனக்கு என்ன தோணுகிறது ?



பார்க்க நிலா போல் இருக்கிறாய்

அப்படி என்றால் என் பெயர் நிலா

நிலா, நீ தனியாக உள்ளாயா?

இன்று, இதுவரை தனி!

ஏதாவது குடிக்கிறாயா?

ஒயின், white

ஒயின் வந்தது.

மேலே மாடிக்கு சென்று பார்த்தால் இந்த இரவில் நகரம் மிக அழகாக தெரியும் என்று அவள் கண்ணிமைக்காமல் சொன்னாள். சரி என்று அவளுடன் மிகவும் ஆவலுடன் நகர்ந்தான்.

மறுநாள், ரவி பாருக்குள் வந்தான். "ஒரு ஸ்காட்ச்" என்று சொல்லிக்கொண்டே கண்ணை மேய விட்டான். அருகே பச்சை ஆடை அணிந்த இளம் பெண்ணை மெதுவாக அளந்தான். அவள் அவனை ஊடுருவி பார்த்து மெலிதாக சிரித்தாள். அருகே சென்றான்

ஐ யாம் ரவி, உன் பெயர் என்ன?

உனக்கு என்ன தோணுகிறது?


நட்சத்திரம் போல மின்னுகிறாய்.

அப்படி என்றால் என் பெயர் நட்சத்திரா!

சிரித்தான்.

நேத்து நான் வந்தப்ப இங்க இருந்த நிலா?

தெரியலயே, மானேஜரை கேள்.



மேனேஜர் வந்தான்.

"நேற்று இங்கே இருந்த நிலா எங்கே" என்றான் ரவி

ஒரு நிமிடம் என்று கையில் இருந்த "டேப்லெட்டை" தடவினான்.

மன்னிக்கனும், OE - 75 மெயின்டெனன்ஸ்க்கு போயிருக்கு

நட்சத்திரா சிரித்தது!

- மணி வைத்தீஸ்வரன்



Scanned with CamScanner

# குருவே சரணம்

# நம் வாழ்வில் ஆசிரியர்களின் பங்கு

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது சான்றோர் வாக்கு. பெற்றோர் அன்பையும் பண்பையும் கொண்டு நம்மை வாழ்க்கையில் வழி நடத்துவர். ஆசிரியர் அறிவையும் அனுபவத்தையும் தந்து வாழ்வை அறிமுகப்படுத்துவர். ஒரு குழந்தையை தன் சொல்லாலும், எழுத்தாலும், பயிற்சியினாலும் ஒரு மனிதனாக உருவாக்கி உருமாற்றம் செய்வதில் ஆசிரியருக்கு பெரும் பங்குண்டு.

எனவேதான் தெய்வத்திற்கு முன் மூன்றாவது இடத்தில் குருவை வைத்திருக்கின்றனர் நம் முன்னோர்கள். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் எனும் சொலவடைக்கு இணங்க, மனிதன் பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவுடன் பிறந்திருந்தாலும் அவ்வறிவை பயன்படுத்த ஒரு வழிகாட்டி அவசியம் தேவை.



ஒரு மாணவனை தன்னம்பிக்கை மிகுந்த மனிதனாக ஆக்குவதில் ஆசிரியர்களின் பங்கு பெரும்பான்மையானது.
நாம் இன்றும் அப்படி ஏதாவது ஒரு ஆசிரியரை நன்றி நிறைந்த இதயத்தோடு நினைவு கூர்வதுண்டு. இப்படி நம் அனைவரின் வாழ்விலும் ஒரு நீங்கா இடத்தை வகிப்பதால்தான் ஆசிரியர்கள் என்றும் போற்றப்படுகிறார்கள். அதிலும் பெற்றோரே ஆசிரியர்களாக அமைந்தால், அது நாம் வாழ்வில் செய்த பெரும் பாக்கியமாகும்.

இச்சமயத்தில் என் ஆசிரிய பெற்றோர்களை மனமகிழ்ச்சியோடும், நன்றியுணர்வோடும் நினைவு கூறுவது பெருமிதம் அளிக்கிறது. இந்த மண்ணுலகில் வாழ ஏதுவான அன்பு, அறிவு, ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பொதுநலம் மற்றும் உடல்நலம் என்று அனைத்தும் நிறைந்த பாடத்தை பெற்றோர்களோடு இயைந்து ஆசிரியர்களும் பல விதத்தில் சிறந்த முறையில் கற்பித்து நம் அனைவருக்கும் ஒரு உன்னமயான வழிகாட்டியாக விளங்கி நம்மை மிக சிறந்த மனிதர்களாக, மேதைகளாக, அறிஞர்களாக, பல்வினை கலைஞர்களாக செதுக்குவதில் பெரும் பங்காற்றுகின்றனர் என்பதில் ஐயமுண்டோ??

ஒரு மனிதனை அவனுக்கே அடையாளம் காட்டுபவராக இருப்பவர்தான் ஆசிரியர். எழுத்தறிவித்ததவன் இறைவன் ஆவான் என்கிறது ஆத்திசூடி. அந்த வகையில் மனித வாழ்வில் பிரிக்க முடியாத சமுதாயத்தின் அச்சாணியாக, எதிர்கால சந்ததியினரை வடிவமைக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது ஆசிரிய சமூகம். அந்த உன்னதமான பணியை செய்யும் ஆசிரியர்களை என்றென்றும் நன்றியோடு நினைவு கூர்ந்து மகிழ்ச்சியடைவோம்.

**- அபிராமி செந்தில், துபாய்**

### டிப்ஸ்...டிப்ஸ்...

சாப்பாட்டு மேசையை துடைக்கும் துணியில் சிறிதளவு உப்போ கற்பூரமோ வைத்துத் துடைத்தால் ஈ மற்றும் பூச்சிகள் உட்காராது.

வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரசக்கற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது



Scanned with CamScanner

# உணவே மருந்து



தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவு இன்றிப் படும்
(அதிகாரம்:மருந்து குறள் எண்:947)

உடல் சூட்டின் அளவறிந்து உண்பானுக்கு தேடல் இல் மருந்து

பசித்தீ...ஜடராக்கினி...
இந்த உடலில் இருக்கும் ஹோமத்தீ ...
உணவு உண்பது யாகம் மாதிரி...
எந்த அளவுக்கு ஹோமத்தீ எரிகிறதோ..அவ்வளவு மட்டுமே உண்ண வேண்டும்.

ஒருவனது தீயளவு அதாவது செரிக்கும் ஆற்றல் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது இக்குறள். முற்குறள்களில் செரிக்கும் அளவு அறிந்து உண்ணவேண்டும் என்று சொல்லப்பட்டது. இங்கு செரிக்கும் ஆற்றல் அல்லது முறை தெரிந்து உண் எனச் சொல்லப்படுகிறது. இங்கு சொல்லப்படும் தீயளவு என்பது ஒருவர்க்குள்ள செரிக்கும் தீயின் அளவு ஆகும். அதாவது உடலின் செரிக்கும் ஆற்றலைச் சொல்வது. அதை ஒருவர் அறிந்துகொண்டிருக்க வேண்டும் எனப்படுகிறது. அது மட்டும் அல்லாமல் காலமும் அறிந்து உண்ண வேண்டும். செரிமான ஆற்றலும் காலமும் தெரியாமல், மிகையாக உண்பவனுக்கு நோயும் அதற்குத் தகுந்தபடி மிகையாக உண்டாகும். பசித்தீ அல்லாமல் கால அளவும் தெரியாமல் பெருமளவு உண்டானானால், அவனிடத்திலே அளவிறந்த நோய்களும் ஏற்படும்.

வறிதே 'தெரியான்' என்று சொல்லப்பட்டுள்ளது. எது தெரியான் என்பது கூறப்படவில்லை. உரையாசிரியர்கள் தெரியான் என்ற சொல்லுக்கு 'இது உண்டிக்குத் தகும் தகாது என்று தெரிந்துணரானுமாய்', காலம் ஆராயாது உண்ணுமவன் எனப் பொருள் கூறினர். தெரியான் என்பது தன் உடம்புக்கு ஏற்ற உணவு எது என்பதை அறியமாட்டாதவன் எனக் கொள்ளலாம்.
பெரிதுண்ணலாவது, மீதூண் விரும்புதல். இது அளவு அறியாச் சூழலில் தொடர்ந்து உணவு அருந்துவதைக் குறிப்பது. சுவைக்கு அடிமையாகி, அளவுக்கு மீறி உண்பதைச் சொல்வது. சிலருக்கு எப்பொழுதும் தீயாய் பசிக்கும். தீயானது தன் முன்னிட்ட எல்லாவற்றையும் விழுங்கி விடுவது போல இவர்கள் கண்டதையும் கண்ட நேரத்தில் தின்பர். விருந்து கொண்டாட்ட இடங்களில் அடிக்கடி கலந்துகொண்டு, ஒரே வேளையில் மிகையாகவும், கலோரிகள் நிறைந்த உணவுகளையும் உட்கொள்வர்; பசியில்லாவிடினும், உடற்பயிற்சி ஏதும் இல்லாமல், தொலைக்காட்சியில் தீவிரமாக மூழ்கியபடியும், கணினியின் முன்பும், அமர்ந்த நிலையிலேயே எப்பொழுதும் எதையாவது மென்றுகொண்டு இருப்பர். இது பெரிதுண்ணல் எனப்படுகிறது.

பெரிதுண்ணல் உடலுக்கு கேடு விளைவிக்கும். அதுவே பல்வேறு நோய்கள் உண்டாகக் காரணமாகிறது. மிகையான உணவு உண்பதால் உண்டாகும் விளைவுகள்: உடல் பருமன், இடுப்பைச் சுற்றித் தேவையற்ற சதை வளர்ச்சி, வயிறு உப்புசம், உணவு எதுக்களித்தல், மந்தம், சர்க்கரைநோய், மனஅழுத்தம், உடல்/மனச்சோர்வு, மிகையாக உண்ணும் தீவழக்கம் (Binge eating disorder), செரிமான உறுப்புக்கள் அனைத்தும் கடும் உழைப்புக்கு உள்ளாதல் போன்றன. பெருந்தீனிக்காரர்களுக்குத் தேவையான கலோரிகள் கரைவதற்கும் வாய்ப்பில்லாமல் போய் நோய் நீங்காமல் அவர்களிடம் நிலைபெற்று விடுகிறது. வாய்க்கு இடங்கொடுத்தல் நோய்க்கு இடம் கொடுப்பதாகும் என்பதை நினைவிற்கொண்டு மிகை உண்ணுதலைத் தவிர்க்க வேண்டும்

குறள் 946
*இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்*
*கழிபேர் இரையான்கண் நோய்*
[பொருட்பால், நட்பியல், மருந்து]

இரைப்பைக்கு அளவுணவு உண்பானின் நிறைவை அடையாரே மீ ஊனுனில்.'



Scanned with CamScanner

எவ்வாறு குறைவாக உண்டு, நோயின்றி, மருந்தும் தேவையின்றி, நிறைவாகவும், இன்பமாகவும் வாழ்வார்களோ, அது போல், உண்ணும் உணவின் அளவறியாது, மிகுந்த அளவில், பெரிய உணவு உண்போரிடத்திலேயே நோயிருக்கும்.

"உண்டிச் சுருங்குதல் பண்டிக்கழகு" என்றொரு சொலவடை இருக்கிறது; இதைத் தவறாகப் பெண்டிர்க்கழகு என்று ஔவையார் சொன்னதாகச் சொல்வதுமுண்டு. அவ்வாறு ஒருதலைப் பட்சமாக, ஔவையைப் போன்ற பெண்கவி கூறியிருப்பார் என்பது ஐயத்துக்குரியது, உண்டி சுருங்குதல் வயிற்றுக்கு அல்லது உடலுக்கு அழகு என்பதே பொருந்துவதாம் . பண்டி என்ற சொல் உடலையும், வயிற்றையும் குறிப்பது; குறிப்பாக "தொந்தியைக்" குறிப்பது. இப்பொழுது அந்த சொலவடை இக்குறளின் கருத்தையொட்டி இருப்பதைக் காணலாம்.

இழிவறிந்து என்றமையின், குறைவாகச் சாப்பிடுவதால், வாதம், பித்தம், சிலேட்டுமம் என்கிற மூன்று ஒரு சமச்சீர் நிலையில் இருப்பதையும், அதன் காரணமாக நோய் முதலியன அண்டாமையும் குறிக்கப்படுகிறது. அளவுக்கு மீறி இரையை விழுங்கி மகிழ்பவன் இடத்து நோய் நீங்காது நிலைத்து நிற்கும் என அவனை எச்சரிக்கவும் செய்கிறார். அளவோடு உண்டால் ஒருவனிடம் மகிழ்ச்சி என்றும் நிலைத்திருக்கும். பெருந்தீனிக்காரன் உண்டது செரிக்க இயலாமல் உடல் நோய் துன்பத்திற்கு ஆளாவான்; இதயநோய், உடல் பருமனாதல், கொழுப்பு மிகையான அளவில் ஏற்படுதல், வயிறு வீங்கிக் காட்சியளித்தல் உள்ளிட்ட பல உடற் கோளாறுகளும் உண்டாகும்.
செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும் (கேள்வி 412) என்று சொல்லும்போதும் சிறிதுதான் உண்ண வேண்டும் என்பவர் வள்ளுவர்.



கழிபேர்இரை' என்பதற்கு மிகப்பெரிய அளவு தீனி என்பது நேர்பொருள். இது அளவு மிகுதியை மட்டுமன்றி வேளை மிகுதியையும் குறிக்கும். நாம் இப்பொழுது ஒரு நாளைக்கு மூன்று வேளை உண்பது என்பதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். 'ஒருநாளில் ஒரு பொழுது உண்பான் யோகி, இருபொழுது உண்பான் போகி, முப்பொழுது உண்பான் ரோகி. நாற்பொழுது உண்பான் துரோகி' என்னும் பேச்சு வழக்கு இங்கே நினையத்தக்கது. இன்று மக்களுக்குப் பெரிதும் ஏற்படும் உடல் தொல்லை, அளவிற்கு மிஞ்சிய உடல் வளர்ச்சியாகும். அதாவது உடற்பருமன் அல்லது தடித்தன்மை (obesity) என்பதாகும். இதற்கு முக்கியமான காரணம் அளவு தெரியாமல் தொடர்ந்து உணவு அருந்துவது ஆகும். கண்டநேரமெல்லாம் உண்ணும் பெருந்தீனிக்காரனிடம் நோய் நிலையாகக் குடிகொண்டுவிடும்.

- குமரன் சிவப்பிரகாசம்









Scanned with CamScanner

# புலம் பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப் பணிகள்

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கடந்த பல நூற்றாண்டுகளாக தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ளனர். புலம் பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப்பணிகள் என்பது பல வருடங்களாக நவீனத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு ஆற்றல்மிக்க வகைமையாக, ஒரு புதுப் பிராந்தியமாக வலுவான தடம் பதித்துள்ளது. ஒரு மனிதன் புலம்பெயரும் போது தன் விழுதுகளைத்தான் பரப்புகிறான். அவன் வேர்கள், தான் பிறந்த மண்ணில் தான் அழுத்தமாகக் கிடக்கின்றன. ஒருவனின் தாய் எப்படி மாற்றப்படமாட்டாளோ அப்படித்தான் பிறந்த இடமும்.

தாய், மண், பண்பு என்ற அடையாளங்களோடு போகுமிடத்தில் கிளை பரப்புவதும் இலை விரிப்பதும் கலாச்சாரக் கலப்பு கொள்வதும் சிறந்த பண்புகளை ஏற்றுக்கொள்வதும் இயல்பானது உயர்வானது. புலம் பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப்பணிகள் என்பது அடுத்த தலைமுறைக்கும் நம் தாய்மொழியாம் தமிழின் சிறப்பை, தமிழர்களின் கலையை, பண்பாட்டை எளிய முறையில் இயல், இசை, நாடகம் மூலம் பரப்புவது, தமிழர்களுக்கான ஒரு பொதுத்தளத்தைக் கட்டமைப்பது போன்றவையே நோக்கமாக இருந்து வருகின்றன

இப்போது ஏராளமான தமிழ்க் கல்வி நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கோவில்கள் கட்டப்படுகின்றன; அங்குள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு தேவாரம், திருவாசகம் கற்றுத்தரப்படுகிறது. புலம்பெயர்வு என்பது பிழையல்ல அது ஓர் உயர்வு. ஒரு பெண் பிறந்த இடத்திலிருந்து தன் புகுந்த வீட்டிற்குப் புலம் பெயர்கிறாள் அவள்தான் உன் தாய். ஓர் உயிர் கர்ப்பப்பையிலிருந்து பூமிக்குப் புலம் பெய்கிறது

தமிழனை தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கலாம் தமிழைப் பிரிக்க முடியாது
ஆங்கிலம் உதட்டோடு ஒட்டிய மொழி; தமிழ் உள்ளத்தோடு ஒட்டிய மொழி

**நாவல்கள்**
50 ஆண்டுகளுக்கும் முன்னரே புலம்பெயர் இலக்கியத்தைத் தமிழில் உருவாக்கிய முதல் மகத்தான படைப்பு சக்தி, ப.சிங்காரம். 1950-களின் தொடக்கத்தில் 'கடலுக்கு அப்பால்' நாவலையும், 1960-களின் தொடக்கத்தில் 'புயலிலே ஒரு தோணி' நாவலையும் எழுதினார். கடலுக்கு அப்பால்' நாவல் இரண்டாம் உலக யுத்த கால நெருக்கடிகளின் பின்புலத்தில் ஓர் அழகிய காதல் கதையை ஊடுபாவாகக் கொண்டது.

இரண்டாவது நாவலான 'புயலிலே ஒரு தோணி' தமிழுக்கு வளம் சேர்க்கும் நாவல்களில் ஒன்று எனலாம். தாயகம் பற்றிய கனவுகளுடன் வாழும் ஒருவனை இரண்டாவது உலகமகாயுத்தம் எப்படிச் சுவீகரித்துக் கொள்கின்றது என்பதையும், யுத்தத்தின் வெற்றி தோல்விகள் அப்பாவி மக்களின் தினசரி வாழ்க்கையை எப்படிப் பாதிக்கின்றன என்பதையும், புலம்பெயர்ந்த நாட்டில் இருப்பும், தாய் மண்ணின் ஏக்க அழைப்புகளும், யுத்த கால நெருக்கடிகளும் வாழ்வைப் புனைவுலகு அனுமதிக்கும் எல்லா எல்லைகளுக்குள்ளும் அகப்படுத்தியிருக்கும் மகத்தான படைப்பு.

**பத்திரிக்கை வெளியீடு**
அயல்நாடுகளிலிருந்து நிறையச் சிறுபத்திரிகைகள் தமிழில் வந்தன. நின்று போயின. மறுபடியும் சில வருகின்றன. புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகள் அவர்கள் வாழுகின்ற நாடுகளில் வெளியாகும் சிறு பத்திரிக்கைகளில் அதிகம் வந்துள்ளன. இந்தச் சிற்றிதழ்கள் தோன்றுவதும் மறைவதுமாக உள்ளன. பிரான்சில் இருந்து 'மௌனம்', 'எக்ஸில்' 'உயிர்நிழல்' போன்றவை. இலண்டனிலிருந்து 'லண்டன் முரசு' 'நாழிகை' முதலியவை. ஆஸ்திரேலியாவிலிருந்து 'வெண்ணிலா' முதலியவை குறிப்பிடத்தக்கவை. மற்றும் ;சமர்', 'சக்தி' காலம் ஆகிய சஞ்சிகைகளும் நீண்ட காலமாக வெளிவருகின்றன.

**தமிழ்ச் சங்கங்கள்**
மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அமீரகத்திலும் தென் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மற்றும் அமெரிக்காவிலும் கனடாவிலும் ஈழத் தமிழர்களை தவிர பல வருடங்களுக்கு முன்பாகவே புலம்பெயர்ந்த தமிழர்கள் இருக்கிறார்கள் அவர்கள் ஆரம்பித்த தமிழ்ச் சங்கங்கள் இன்றும் நடைபெற்று வருவது என்பது குறிப்பிடத்தக்கது



Scanned with CamScanner

இந்த தமிழ்ச் சங்கங்கள் குறிப்பாக இளம் தலைமுறை இடையே தமிழை வளர்ப்பது தமிழ் ஆர்வத்தை தூண்டுவது புலம்பெயர்ந்த நாட்டில் வசித்தாலும் அந்த கலாச்சாரத்தில் மூழ்காமல் தமிழ் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பாரம்பரியம் மறக்காமல் வளர்க்க இந்த தமிழ் சங்கங்களினுடைய பணி பாராட்டுதலுக்குரியது

பாரதி கலை மன்றம் நடத்தும் பேச்சுப் போட்டிகளுக்கு நடுவர்களாக இருக்கும்போது உள்ளம் அடைகின்ற ஆத்மார்த்தமான மன நிறைவுக்கு இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். இந்த சின்ன வயதிலேயே சங்க இலக்கியத்திலிருந்து தரப்படும் தலைப்புகளுக்கு மழலை பாரதிகளும் பாலபாரதிகளும் இளைய பாரதிகளும் அந்த தலைப்பில் பேசுகின்ற பொழுது அருமையான தமிழ் உச்சரிப்பு ஆழமான கருத்துக்கள் என்று மெல்ல தமிழ், இல்லை இல்லை வேகமாகவே தமிழ் வளரும் என்று மனம் உரக்க சொல்கிறது.

**கவிதைகள்**

இதுவரை வெளி வந்துள்ள புலம் பெயர்ந்தோர் படைப்புகளுள் கவிதைத் தொகுப்புகளே அதிகமானவையாகும். கவிதைகள் அவை பாடுகின்ற பொருட் பரப்பிலும் அவற்றின் புனைதிறன் உத்தியிலும் புதிய நுட்பங்களை காட்டி நிற்கின்றன. புலம்பெயர்ந்தவர்கள் தங்களது இன்னல்களையும்,கனவுகளையும், தாயகத்தின் நினைவுகளோடு தாம் அடையும் துயர்களையும், புலம்பெயர் நாட்டிலுள்ள தங்கள் வாழ்க்கை நிலையையும், சொந்த நாட்டின் நிகழ்வுகள் குறித்தும் பல்வேறு கவிதைகளை படைக்கின்றனர்.

கனடா நாட்டில் வசிக்கும் கவிஞர் புகாரியின் 'புலம்பெயர் தமிழா தலை வணக்கம்' கவிதை புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்வை இப்படி சொல்கிறது

புலம்பெயர் தமிழா...!!!
ஊரோடு உறவாட முடியாமல்,
வேரோடு உறவிழந்து,
அயல் நாடெனும் விடுதியில்,
சொந்தபந்தமின்றி தனியாக,
தன்னுறவுகளுக்காக,
இராப்பகலின்றி நீ படும் பெரும் பாடு,
நாமறிவோம்,

பிறநாட்டில் வாழ்ந்தாலும்,
தன்நாட்டு உறவுகளுக்காக,
நீ சிந்தும் ஒவ்வொரு துளி வியர்வைக்கும்,
பதில் கிடைக்கும் நாள் தொலைவில் இல்லை ...!!!!

நமக்காக விடியலை தேடி செல்லும் நீங்கள்,
நிச்சயம் ஒருநாள் அந்த விடியலை பெற்று,
நமது துயர் நீக்கி, கண்ணீர் களைந்து,
நம்மை நிமிர்ந்து பார்க்கும் போது,
உங்களுக்காக பரந்த விழியுடன்,
வரவேற்பு கம்பளம் விரித்து,
வழிமீது விழி வைத்து காத்திருப்போம்,
அவர்களுடன் இணைந்து இந்த தமிழனும்...!!!

புலம்பெயர் தமிழர்கள் தாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் பிறந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்றெண்ணித் தமது அனைத்து முயற்சிகளிலும் தமது அடையாளத்தை நிலைநிறுத்தும் வண்ணம் வளர்ந்துள்ளார்கள் என்பதும் பெருமைக்குரியதாகும்,



Scanned with CamScanner


இந்தக் கட்டுரையின் வாயிலாக தமிழ்ச் சங்கங்களிடம் நான் கேட்டுக் கொள்வது பிரபலமான பேச்சாளர்களையே மீண்டும் மீண்டும் அழைத்து அவர்கள் கேட்கும் பெரும் தொகையை கொடுத்து பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகும் நீங்கள் புதியவர்களை அழையுங்கள் அவர்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்.

தமிழ் வளர்ப்பதில் பட்டிமன்றம் எவ்வளவு முக்கிய பங்கு வகிக்கிறதோ அதைவிட அதிக பங்கு வகிப்பது கவியரங்கம். ஆனால் இன்று தமிழகத்திலேயே கவியரங்கங்கள் குறைந்துவிட்டது. அதற்கான காரணம் புகழ்பெற்ற கவிஞர்களுக்கு எல்லாம் வயதாகி விட்டதாலும் இளம் கவிஞர்கள் எல்லாம் கவியரங்கங்களை தவிர்த்து விட்டு சினிமாவுக்கு பாடல் எழுதுவதில் முழு கவனம் செலுத்துகிறார்கள். இனி கவியரங்கங்களுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும் என்பது இந்த கட்டுரையின் வாயிலாக உங்களிடம் எனது அன்பு வேண்டுகோளாக வைக்கிறேன். புதிய வரவுகளால் தமிழ் தழைக்கும் என நம்புகிறேன்.



தமிழர்தம் உடலின் உள்ளே திரண்டோடும் இரத்தம் தமிழாக வேண்டும்.
தமிழர்தம் விழியின் உள்ளே திரையேறும் கனவும் தமிழாக வேண்டும்.
தமிழர்தம் உள்ளத்துள்ளே தினமோடும் எண்ணம் தமிழாக வேண்டும்.
தமிழர்தம் உயிரின் உள்ளே துடிக்கின்ற துடிப்பும் தமிழாக வேண்டும்.

\- கவிஞர்.ஆ.ஜான் தன்ராஜ்
சென்னை









Scanned with CamScanner

# என் கேள்விக்கு என்ன பதில்?





அன்னபூரணி தேவராஜா
யோகா பயிற்சியாளர்

அன்னபூரணி தேவராஜா சிவானந்தா ஆசிரமத்தில் முறையாக யோகா பயிற்சியில் முதுநிலை பட்டமும் சென்னை கலாஷேத்ராவில் பரதநாட்டியத்தில் டிப்ளமோவும் பெற்றவர். நமது பாரதி கலை மன்ற உறுப்பினர்களுக்காக, யோகா தொடர்பான கேள்விகளுக்கு இங்கு நமக்கு விளக்கம் அளித்துள்ளார்.

## யோகா என்றால் என்ன?

யோகா என்பது இணைப்பது என்பதே ஆகும். நம்முள் இருக்கும் ஜீவாத்மா பிரபஞ்சம் என்னும் பரமாத்வாவுடன் ஒன்றிணைந்து ஏகத்தை அடைவதே யோகம் எனப்படும். ஆனால் இன்றைய நடைமுறையில் யோகா என்பது வெறும் உடற்பயிற்சி மற்றும் மூச்சுப்பயிற்சி என்றாகிவிட்டது. உடலையும் மூச்சையும் மனதையும் இறையோடு இணைப்பது என்பதே உண்மையான யோகா.

## யோகாவிற்கும் தியானத்திற்கும் உள்ள வித்தியாசம்?

தியானம் வேறு யோகா வேறு என்றில்லை. தியானம் என்பது யோகாவின் ஒரு பெரிய அங்கமாகும். இன்றைய பயன்பாட்டு முறையில் ஒரு சிலர் உடலை சீர்படுத்துவது என்பது மட்டும் மூலம் மட்டுமே தியான நிலையையோ, யோக நிலையையோ அடைய முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒரு பரிபூரண யோகத்திற்கு அஷ்ட அங்கங்கள் தேவைப்படுகிறது. யோகத்தினை பயின்று தேர்ச்சியுறும் போது வாழ்க்கையை தியானம் என்ற ஒரு கண்ணோட்டத்தில் பார்க்க இயலும்.

## யோகாவின் பயன்பாடுகள் என்னென்ன?

யோகாவின் பயன்பாடுகள் எண்ணிற்கடங்காதது. இன்றைய வாழ்க்கை முறைக்கு யோகா ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமேயாகும். உடலளவில் மிகக்கொடிய நோய்களைத் தடுக்கும் தடுப்பாக இருப்பதோடு அல்லாது, மனரீதியான பிரச்சனைகளுக்கும் ஒரு மிகப்பெரிய தீர்வாகவே யோகா செயல்படுகிறது. அன்னமயம், பிராணமயம், மனோன்மயம், விக்யானமயம் மற்றும் ஆனந்தமயம் எனும் ஐந்து கோஷங்களையும் உள் உணர்த்தி அதனை சீரமைப்பதே யோகாவின் வேலையாகும்.

## யோகா செய்வதற்கு ஏதும் உணவு வரைமுறைகளை பின்பற்ற வேண்டுமா?

உடல், சுவாசம், மனம் அறிவு மற்றும் ஆனந்தம் எனும் ஐந்து கோஷங்களையும் சீரமைத்து சகல சித்தர்களின் கூற்றுப்படி யோகாமாக யோகத்தை கடைப்பிடிப்பவர்கள் சைவத்தை மட்டுமே பின்பற்ற இயலும். ஏனெனில் அவர்கள் அனைத்து உயிர்களையும் இறையும், இறையோடு இணைந்த ஆத்மாவாகவே காண்கிறார்கள். வெறும் உடற்பயிற்சியாக யோகத்தை நாடுபவர்களும் இவ்வுண்மையை உள் உணர்ந்தால் யோகாவின் பயன்பாடுகள் அதிகம்.



Scanned with CamScanner

## மாதவிடாய் காலங்களில் ஆசனங்கள் செய்யலாமா?

மாதவிடாய் காலத்தில் பொதுவாக இயன்ற அளவு ஓய்வு கொடுப்பது நல்லது. சாந்தநிலையை மேற்கொள்ளும் ஒரு சில ஆசனங்களும், மூச்சுப் பயிற்சிகளும் அவரவர் விருப்பத்திற்கேற்ப மேற்கொள்ளலாம்.

## யோகா செய்வதற்கு பயிற்சியாளர் அவசியமா? அல்லது யோகா நிகழ்ச்சிகள் மற்றும் புத்தக வழிமுறைகளைப் பின்பற்றி செய்வது சரியா?

உடலையும் மனதையும் தாங்கள் வசம் கையாளத் தெரிந்த விழிப்புணர்வாளர்களுக்கு பயிற்சியாளர்கள் தேவையில்லை.

## எந்த வயதில் இருந்து யோகப் பயிற்சி செய்யலாம்? வயது வரைமுறை ஏதும் உண்டா?

குழந்தைகள் இயற்கையாகவே யோகநிலையில் தான் இருப்பார்கள். அவர்கள் தங்கள் குழந்தைத்தன்மையை இழந்த தருணம் முதலே அவர்களுக்கு யோகப்பயிற்சி அளிக்கலாம். பொதுவாக ஐந்து வயது முதல் யோக பயிற்சி செய்ய துவங்கலாம். யோகாவிற்கு வயது வரைமுறை என்பது இல்லை. முக்கியமாக அறுபதைக் கடந்தவர்கள் யோகத்தை தங்களது வாழ்வில் அங்கமாக்கிக் கொள்வது பெரும் நன்மைகளை அளிக்கும். உடல், மனம் மற்றும் ஆன்மிக ரீதியாக அவர்களை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் ஒரு சிறந்த மார்க்கம் யோகாவாகும்.

## யோகாவினால் ஏதும் பின்விளைவுகள்?

முறையின்மையான பயிற்சிகளால் பின்விளைவுகள் உண்டு. ஒரு சிலர் தங்கள் யோகப் பயிற்சியை மற்றவர்களோடு ஒப்பிட்டு தங்கள் உடம்பை வருத்திக் கொள்வதாலும் பக்கவிளைவுகளைக் காண்பதுண்டு.



என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே!!
- சிவ வாக்கியர்

இந்நிலையை உணர்வதற்கான வழித்தடமே யோகப் பயிற்சி.

யோகாவை ஒரு அங்கமாக்கிக் கொள்வதால் உடல் மற்றும் மனம் ஆரோக்கியமாவதோடு, வாழ்க்கையைக் கையாளும் திறனும் ஆத்ம முக்தியும் எளிதில் அடைய முடியும்.








Scanned with CamScanner

nupur

Center of Performing Arts

**Dance with your heart, your feet will follow !**

Specialized training in Bharatnatyam dance form from accailmed dance Guru Rupa Aranke who has 30+ years of experience in teaching the art form.

Also teaching semi classical and folkdances of India which help students bond with Indian tradition, culture and religion in a exciting way. Adults Welcome !

Small size batches to ensure personal attention.

Ample opportunities to perform in and around H town !!



Locations:
Sugar Land
Pear Land
Clear Lake

Online classes available too.

Contact: Rupa Aranke
Cell : 281-239-9134
email: nupurdance18@gmail.com
www.nupurdances.com



Hurry !! Events coming up to perfrom and summer camps.

Contact now to avail of special offers .





Scanned with CamScanner

# சமையல்



## அன்னாசிப் பழப்புட்டு



**தேவையானப் பொருட்கள்:**

அன்னாசிப் பழம்- 1 (முழுப்பழம்)
அரிசி மாவு- 2 கப்
மஞ்சள் தூள் - 1tsp
துருவிய தேங்காய் - ½ கப்
உப்பு - 1 (அ) 2 டீஸ்பூன்

**செய்முறை:**

முதலில் அன்னாசிப்பழத் தோலை நீக்க வேண்டும். நன்கு சுத்தப்படுத்தி அதனை சிறிய துண்டுகளாக்கவும். பிறகு மிக்ஸியில் திப்பியில்லாமல் மைய்ய அரைத்துக் கொள்ளவும். அரைத்தச் சாற்றில் 1 tsp மஞ்சள் தூள் சோர்த்து நன்கு கலக்கித் தனியாக வைத்துக்கொள்ளவும். மற்றொரு பாத்திரத்தில் அரிசி மாவு, உப்பையும் சேர்த்து நன்கு கலக்கவும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அன்னாசிப் பழச்சாற்றை ஊற்றி கைகளால் புட்டு மாவு பதத்திற்கு வரும்வரை கலக்கவும். பிறகு புட்டு வேக வைக்கும் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். அதன் குழாவில், முதலில் துருவிய தேங்காவை 2 தேக்கரண்டி போடவும், பின் அன்னாசிப்பழ மாவைப் போடவும். இதைப்போல் ஒன்றன்பின் ஒன்றாக போடவும், கடைசியாக தேங்காய் துருவல் போட்டு மூடவும். (குறிப்பு: மாவையோ அல்லது தேங்காவையோ அழுத்தம் குடுத்து குழாவில் போடக்கூடாது).
தண்ணீர் கொதிவந்த பாத்திரத்தில் குழாவை வைத்து 10-13 நிமிடம் வேக விடவும். மூடியின் மேல் துவாரங்களிலிருந்து ஆவி நன்றாக வரும், அதுவே புட்டு வென்றதுக்கான அடையாளம். பிறகு மெதுவாக பாத்திரத்திலிருந்து புட்டை கம்பியால் தட்டிற்கு மாற்றவும்.

சுடசுட ருசியான அன்னாசிப்பழப் புட்டு தயார். - மஹாலக்ஷ்மி கார்த்தி

## முளைக்கட்டிய பாசிப்பயறு சாலட்



**தேவையானப் பொருட்கள்:**

முளைக்கட்டிய பாசிப்பயறு- 2 கப்
ஆப்பிள் - 1 கப் நறுக்கியது
வெள்ளரிக்காய் - 1 கப் நறுக்கியது
வெங்காயம் - 1/2 கப் நறுக்கியது
ஸ்ட்ராபெரி - 1/2 கப் நறுக்கியது
திராட்சை - 1/2 கப் நறுக்கியது
பச்சை மிளகாய் - 2 நறுக்கியது
லெமன் ஜூஸ் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
கொத்தமல்லித்தழை - 1/4 கப் நறுக்கியது



**செய்முறை:**

ஒரு அகலமான பாத்திரத்தில் மேலே உள்ள அனனத்துப் பொருள்களையும் சேர்க்கவும். நன்றாகக் கலந்து பரிமாறவும். முளைக்கட்டிய பாசிப்பயறு சாலட் தயார். - ஹேமா நரேன்



Scanned with CamScanner

## வத்தக்குழம்பு



**தேவையான பொருட்கள்:**
சுண்டைக்காய் வத்தல் - 1/4 கப்
வெந்தயம் - 2 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிது
புளி - சிறிய எலுமிச்சை அளவு
பெருங்காயத்தூள் - 2 டீஸ்பூன்
காரப்பொடி - 1 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

**வறுத்து அரைக்க:**
நல்லெண்ணெய் - 1 டீஸ்பூன்
கடலைப்பருப்பு - 2 டீஸ்பூன்
துவரம் பருப்பு - 2 டீஸ்பூன்
வரமிளகாய் - 4
மிளகு - 1 டேபிள் ஸ்பூன்
மல்லி - 2 டீஸ்பூன்

**தாளிக்க:**
நல்லெண்ணெய் - 3 டீஸ்பூன்
கடுகு - 1 டீஸ்பூன்
கடலைப்பருப்பு - 1 டீஸ்பூன்

**செய்முறை:**

முதலில் புளியைக் கரைத்துக் கொள்ளவும். ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் கடுகு, கடலைப்பருப்பு போட்டு தாளிக்கவும். பிறகு சுண்டைக்காய் வத்தல், வெந்தயப்பொடி சேர்க்கவும். நன்றாக வதங்கியதும் கரைத்து வைத்த புளித்தண்ணீர், தேவைக்கேற்ப உப்பு, சிறிதளவு மஞ்சள்தூள் சேர்க்கவும். புளிக்கரைசலை பச்சை வாசனை போக நன்றாக கொதிக்க விடவும். பிறகு மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் வறுத்து அரைத்து கொள்ள வேண்டிய கடலைப்பருப்பு, மல்லி, வரமிளகாய் மற்றும் மிளகு ஆகியவற்றை ஒவ்வொன்றாக சேர்த்து வறுத்து இறக்கி, குளிர வைத்து மிக்ஸியில் போட்டு பொடி செய்து வைத்துக் கொள்ளவும். இதனுடன் பெருங்காயத்தூள், வெல்லம், காரப்பொடி, கறிவேப்பிலை ஆகியவற்றை சேர்த்துக் கொள்ளவும். புளிக்கரைசல் நன்றாக கொதித்தவுடன் அரைத்து வைத்துள்ள பொடியை சேர்த்து நன்றாக கலந்து கொதிக்க விடவும். குழம்பு கெட்டியான பதம் வந்தவுடன் ஒரு டீஸ்பூன்நல்லெண்ணெய் ஊற்றி இறக்கவும். சுவையான வத்தக்குழம்பு தயார்.



மஹாலக்ஷ்மி சிவா

## புவியைக் குளிர வைக்கும் எறும்புகள்



உலகையே அச்சுறுத்தி வரும் புவி வெப்பமயமாதல் எறும்புகளால் தடுக்கப் படுவதாக அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

எறும்புகள் மண்ணில் உள்ள கால்சியம் மக்னீசியம் சார்ந்த மணற்சத்துகளைச் சிதைக்கின்றன. இதனால் காற்றில் கலந்துள்ள கார்பன்_டை ஆக்சைடு கொஞ்சம் கொஞ் சமாகக் குறைகிறது. எனவே, புவி வெப்பமடைவது குறைந்து குளிச்சியடையும் என்று கூறியுள்ளனர்.

## இதயம் பற்றிய சுவாரஸ்யமான உண்மைகள்



உலகிலேயே இந்தியாவின் ரயில்வே தொடர்புகள், இரண்டாவது இடத்தில் உள்ளது. அத்தகைய பிரம்மாண்ட நெட்வொர்க்கை விட மூன்று மடங்கு நீளமானது மனிதனின் ரத்த குழாய்கள்.
ஆண்களை விட பெண்கள் மற்றும் குழந்தைகளின் இதயத்துடிப்பு சற்று வேகமாக இருக்கும். அதில் ஆண்களுக்கு ஒரு நிமிடத்திற்கு 70 முறையும், பெண்களுக்கு ஒரு நிமிடத்திற்கு 78 முறையும் துடிக்கும்.
இதயம் ஒருநாளில் 7,200 லிட்டர் ரத்தத்தை அனுப்புகிறது. ஆனால் விழிவெண்படலத்துக்கு மட்டும் ரத்தம் தேவைப்படாது.



Scanned with CamScanner

## வெங்காயச் சட்னி



**தேவையான பொருட்கள்**

வெங்காயம் 2 பெரியது
தேங்காய் 2 கப் துருவியது
புளி - சிறிதளவு
வெல்லம் - சிறிதளவு
வரமிளகாய் - 10
உப்பு - தேவையான அளவு



செய்முறை:

மிக்ஸியில் எல்லா பொருட்களையும் சேர்த்து மைய அரைக்கவும். வாணலியில் நான்கு டேபிள் ஸ்பூன் எண்ணெய் சேர்த்து அரைத்த விழுதை சேர்க்கவும். நன்றாக கலந்து முப்பது நிமிடங்கள் வரை பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். இந்த சட்னி சப்பாத்திக்கு நன்றாக இருக்கும். - சந்திரிகா டொந்தி

## காய்கறி தொகையல்



**தேவையான பொருட்கள்**

கேரட் - 1 பெரியது
குடை மிளகாய் - 1 பெரியது
சௌ சௌ - 1
உளுந்தம் பருப்பு - 1 1/2 டேபிள் ஸ்பூன்
வரமிளகாய் - 5
புளி - சிறிதளவு
பெருங்காயம் - 3/4 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 3 டீஸ்பூன்



**செய்முறை:**

முதலில், கேரட், குடை மிளகாய் மற்றும் சௌ சௌ அனைத்தையும் நறுக்கி வாணலியில் 1 1/2 டீஸ்பூன் எண்ணெய் சேர்த்து நன்கு வதக்கவும். வதங்கியதும் தனியே எடுத்து வைக்கவும். அதே வாணலியில் 1 டீஸ்பூன் எண்ணெய் விட்டு உளுந்தம் பருப்பு, வரமிளகாய், பெருங்காயம், புளி மற்றும் உப்பு சேர்த்து வறுத்துக் கொள்ளவும். பச்சை மிளகாயையும் சேர்த்து வதக்கவும். ஆறியதும், வதக்கி வைத்திருந்த காய்களுடன் சேர்த்து மிக்ஸியில் சிறிது தண்ணீர் சேர்த்து அரைக்கவும். கடைசியாக வறுத்த உளுந்தம் பருப்பையும் சேர்த்து கொர கொரப்பாக அரைக்கவும். தேங்காய் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம். - விஜயா வெங்கடேசன்

## டிப்ஸ்...டிப்ஸ்...

| | | |
|---|---|---|
| இட்லி சாம்பாரில் கடைசியாக மிளகு, சீரகம், காய்ந்த மிளகாய், கொத்தமல்லி போன்றவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு வறுத்து விட்டு மிக்ஸியில் அரைத்து சாம்பாரில் போட்டால் கூடுதல் சுவையாக இருக்கும். | கொண்டைக்கடலை, பட்டாணி, மொச்சை போன்றவற்றை முதல் நாள் ஊறப் போட மறந்து விட்டால், அவற்றை எண்ணெய் விடாமல் நன்றாக வறுத்து பிறகு குக்கரில் வேக வைத்தால் நன்கு வெந்து விடும். | பிரண்டையை சிறு துண்டுகளாக நறுக்கி,வாணலியில் நல்லெண்ணெய் விட்டு சிவக்க வதக்க வேண்டும். பிறகு காய்ந்த மிளகாய், உளுந்து, தேங்காய், பூண்டு சேர்த்து வதக்கி பிரண்டை, உப்பு மற்றும் சிறுது தண்ணீர் சேர்த்து மைய அரைத்தால் பிரண்டைத் தொகையல் தயார். |



Scanned with CamScanner

## திருநெல்வேலி அவியல்



**தேவையான பொருட்கள்**

கேரட் - 100 கிராம்
பீன்ஸ் - 50 கிராம்
கொத்தவரங்காய் - 50 கிராம்
முருங்கைக்காய் - 2
வாழைக்காய் - 2
கத்தரிக்காய் - 150 கிராம்
உப்பு - தேவையான அளவு
மாங்காய் - 1 சிறியது
தேங்காய் - 1/2 கப்
தயிர் - 2 டேபிள் ஸ்பூன்
சீரகம் - 1 டேபிள் ஸ்பூன்
சின்ன வெங்காயம் - 4
பூண்டு - 1 பல்
பச்சை மிளகாய் - 6
கடுகு - 1/4 டீஸ்பூன்



செய்முறை:
காய்கறிகளா நீளவாக்கில் நறுக்கிக் கொள்ளவும். சிறிது தண்ணீர் விட்டு காய்கறிகளை வேக விடவும். முக்கால் பதம் வெந்ததும் இறக்கி வைக்கவும். தேங்காயுடன் சீரகம், பச்சை மிளகாய், பூண்டு, வெங்காயம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். வெந்த காய்களுடன் அரைத்த விழுதை சேர்த்து நன் கு கொதிக்க விடவும். கடைசியில், தயிர் மற்றும் சிறிது தேங்காய் எண்ணெய், மஞ்சள் பொடி மற்றும் உப்பு சேர்த்து இறக்கவும். கடைசியில், கடுகு உளுந்தம் பருப்பு தாளித்து சேர்க்கவும். - சுந்தரி நம்பி

## குடைமிளகாய் கறி



தேவையானபொருட்கள்:

குடை மிளகாய் - 2 பெரிய துண்டுகளாக நறுக்கவும்
பச்சை மிளகாய் - 2
கறிவேப்பிலை- சிறிது
வெங்காயம் நறுக்கியது
இஞ்சி பூண்டு விழுது - 1 1 /2 டீஸ்பூன்
கிராம்பு - 3
மிளகாய்த்தூள் - 1/4 டீஸ்பூன்
மல்லித்தூள் - 1/2 டீஸ்பூன்
தேங்காய் விழுது - 1/2 கப்
புளி விழுது - 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை:
வாணலியில் 2 டேபிள் ஸ்பூன் எண்ணெய் விட்டு கிராம்பு, ஏலக்காய் மற்றும் நறுக்கிய வெங்காயத்துண்டுகளை சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். இஞ்சி பூண்டு விழுது, பச்சை மிளகாய், கொத்தமல்லி தழை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பின்னர் நறுக்கிய குடை மிளகாய், மல்லித்தூள், மிளகாய்த்தூள் சேர்க்கவும். நன்றாக கலந்து விடவும். தேங்காய் விழுது, புளி விழுது, கறிவேப்பிலை மற்றும் சிறிதளவு தண்ணீர் சேர்த்து 15 நிமிடங்கள் மிதமான தீயில் சமைக்கவும். குடை மிளகாய் கறி தயார்.



அர்ச்சனா ரகு



Scanned with CamScanner

# சித்திரக்கூடம்





குரு பிரபாகரன்



அநிந்தித் பாலசுப்ரமணியன்





இலகுமப் புகைப்படம்




இஷாஜோதி பிரபாகரன்




Scanned with CamScanner




நேசன் ராதாகிருஷ்ணன்




ஹரிஹரன்



அதிதி இரங்கி



ஈஷான் மஹேஷ்




சரிகா நம்பி





Scanned with CamScanner







சாருலதா கார்த்தி





சனஸ்யா பாலசுப்ரமணியன்




ராகேஷ் ராஜேஷ் பிரபு



Scanned with CamScanner




ஆஷிகா மீனாட்சி சுந்தரம்




அரன் சங்கரன்






அக்ஷதா பெருமாள்



ரித்திஷ் ராஜேஷ் பிரபு





Scanned with CamScanner





வருணேஷ் செல்வராஜ் விஜயானந்த்




ஜான்விகா கார்த்தி






மஹதி மித்ரா சரவணன்



அகிலன் பூபதி




Scanned with CamScanner





தன்மயி பெஜாவடா



நிதின் பரத்






அனன்தரா கோகுல்



Scanned with CamScanner

மார்ட்டின் லூதர் கிங், எடுத்துக் கொண்ட குறிக்கோளில் வைத்த உறுதியும் அந்த குறிக்கோளை அடைய மேற்கொண்ட விடாமுயற்சியுமே எனக்கு அவரை மிகவும் பிடிக்கக் காரணம். அனைத்து தடைக் கற்களையும் தகர்த்து, படைத்த சாதனைகளால் இன்றும் பல பேருக்கு உதாரண மனிதராய் அவர் மேற்கோள் காட்டப்படுகிறார்.
மார்ட்டின் லூதர் கிங் அடித்தட்டு மக்களின் சமூக வளர்ச்சி மற்றும் நிறவெறி கொள்கைகளுக்கு எதிராக போராடியவர். அவர் ஒரு சமூக சீர்திருத்தவாதி.
MLK என்று சுருக்கமாக அழைக்கப்படும் மார்ட்டின் லூதர் கிங், கறுப்பின மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும், அமெரிக்க நிறவெறி கொள்கைகளுக்கு எதிராகவும் எழுச்சி மிக்க பல உரைகளை ஆற்றினார். அவற்றுள் மிக முக்கியமான ஒன்று - “I Have a Dream".
நம்முடைய குறிக்கோளை அடைய முழு முயற்சி செய்ய வேண்டும். எந்த தடைகள் வந்தாலும் மன உறுதியோடும் தெளிவோடும் அவற்றை முறியடித்து நம் குறிக்கோளை அடைய வேண்டும். மேலும் அனைவரிடமும் எந்த பாகுபாடுமின்றி சரி சமமாக பழக வேண்டும்.





ஆதவ் கேசவன்



உலக அமைதி என் பார்வையில்

அருள்செல்வி அமிர்தலிங்கம்
இரவின்,கலிபோர்னியா



வித்யா ரவிசங்கர், சுகர்லேண்ட்



Scanned with CamScanner

# பாரதி கலை மன்ற தமிழ்ப்பள்ளிகள்




BKM தமிழ்ப்பள்ளி ஒருங்கிணைப்பாளார்கள்



BKM கேட்டி தமிழ்ப்பள்ளி



BKM சுகர்லேண்ட் தமிழ்ப்பள்ளி



BKM சைப்ரஸ் தமிழ்ப்பள்ளி



BKM ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளி



BKM பியர்லேண்ட் தமிழ்ப்பள்ளி



Scanned with CamScanner


# கோலங்கள்





மஹாலக்ஷ்மி கார்த்தி








சுபஸ்ரீ கோகுல





கனி



உஷா நாகராஜன்

**கோலம் டிப்ஸ்...**

**மாக்கோலம் போடுவதற்கு அரிசியை ஊற வைத்து அரைப்பதற்கு பதிலாக, உடனடியாக கோலம் போடுவதற்கு சிறிது அரிசி மாவு, சிறிது மைதா மாவு இரண்டையும் தண்ணீரில் கலந்து கோலம் போடலாம்.**
**கோல மாவுடன் சம அளவு அரிசி மாவு கலந்து கோலம் போட்டால் வாசலில் பளிச்சென்று இருக்கும்.**



Scanned with CamScanner

# பாரதி கலை மன்ற நிகழ்வுகள்

## பாரதி கலை மன்ற தமிழ்ப்பள்ளி போட்டிகள்



தமிழ்ப் பள்ளிப் போட்டிகள் மார்ச் 4, 2023 அன்று மீனாட்சி திருக்கோவில் சரஸ்வதி மண்டபத்தில் இனிதாக நடந்தன. மொத்தம் 140 மாணவர்கள், ஐந்து BKM பள்ளிகளில் இருந்து இப்போட்டியில் கலந்து கொண்டு தங்கள் தமிழ்த் திறமைகளை வெளிப்படுத்தினர். MTS நூலகம் மற்றும் சரஸ்வதி மண்டபத்தின் வாயிலில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் போட்டி தொடங்கியது.
தமிழ்ப்பள்ளி இயக்குனர் திருமதி. ஸ்ரீதேவி சுப்ரமணியன் குழந்தைகளுக்கு வாழ்த்து தொடங்கி, நிகழ்வுகளின் வரிசையை விளக்கினார். BKM தலைவர் திருமதி. கங்காமலரும் மாணவர்கள் வெற்றி பெற வாழ்த்தினார்.

இந்த ஆண்டுக்கான தமிழ்ப் போட்டிகள் சுகர்லேண்ட் தமிழ்ப் பள்ளி, போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்தியது. சுகர்லேண்ட் தமிழ்ப்பள்ளியின் முதல்வர் திருமதி. ரெங்கநாயகி, துணை முதல்வர்கள் திரு. மகேஷ் மற்றும் திருமதி. கீதா ஆகியோர் போட்டிகளை நடத்தினர். அனைத்து சுகர்லேண்ட் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் நடத்திக் கொடுத்தனர். நமது தமிழ் சமூகத்தைச் சேர்ந்த தன்னார்வலத் தொண்டர்கள் நடுவர்களாக விளங்கிப் போட்டிகளுக்கு தீர்ப்பு அளித்து உதவினார்கள். மாணவர்களுக்கு மதிய உணவாக பீட்சா வழங்கப்பட்டது. பீட்சாவை திரு. பாண்டுரெங்கன் தன் நிறுவனத்திற்கான விளம்பரதாரராக (செஞ்சுரி 21) அச்செலவினை ஏற்றார். அனைத்து தன்னார்வலத் தொண்டர்கள், மற்றும் நீதிபதிகளுக்கும் மதிய உணவு பிகேஎம் சார்பாக வழங்கப்பட்டது.



அனைத்து பள்ளி ஒருங்கிணைப்பாளர்களும் இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்த போட்டி பதிவுகள் மற்றும் பிற செயல்பாடுகளுக்கு மனமுவந்து உதவினார்கள்.

BKM நிர்வாக குழு உறுப்பினர்கள், திருமதி கங்காமலர், திருமதி, அனிதா மற்றும் திருமதி விஜி, திருமதி உஷா குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் வந்திருந்தார்கள். குழந்தைகள் தங்கள் போட்டிகளுக்குச் சென்ற பிறகு, அனைத்து பெற்றோர்களும் ஒரு குறுகிய பட்ஜெட் விளக்கக் காட்சிக்காக நூலகத்தில் அமரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

BKM தலைவர் திருமதி .கங்காமலர் Bkm இன் ஈடுபாடு மற்றும் தமிழ்ப்பள்ளிக்கானஆதரவு பற்றிய அறிமுகக் குறிப்புடன் தொடங்கினார். தமிழ்ப்பள்ளி வரவு செலவுத் திட்டத்தை பிகேஎம் வாரிய பொருளாளர் திருமதி.அனிதா தாக்கல் செய்தார். விளம்பரதாரர்கள் (Sponsorships) பற்றியும், தமிழ்ப்பள்ளி நடத்துவதற்கு நன்கொடைகள் அவசியம் என்றும் அவர் பேசினார். திருமதி. விஜி தமிழ்ப்பள்ளிக்கான BKM இன் ஆதரவைப் பற்றியும், பெரு நிறுவன விளம்பரதாரர்களை (Sponsorships) ஊக்குவிப்பது பற்றியும் பேசினார்.
போட்டிகள் நடந்து கொண்டிருந்த போது திருமதி. பூவிழி மற்றும் திரு. சிவா பல்வேறு பொழுதுபோக்கு விளையாட்டுகளை நடத்தி காத்திருந்த பெற்றோர்களை உற்சாக படுத்தினர். மறுநாள் மின்னஞ்சலில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டது மொத்தத்தில் இது ஒரு வெற்றிகரமான நிகழ்வாக இருந்தது.

**-ஸ்ரீ தேவி சுப்ரமணியன்,**
**தமிழ்ப்பள்ளி இயக்குனர்**



Scanned with CamScanner

# பாரதி கலை மன்ற பொங்கல் விழா




பாரதி கலை மன்றம் இந்த ஆண்டின் துவக்கத்தினை தித்திக்கும் பொங்கல் திருநாள் கொண்டாட்டத்துடன் ஆரம்பித்தது. தாய்த்தமிழ் உறவுகளுக்கு பொங்கல் அன்று வெளியான வாரிசு மற்றும் துணிவு திரைப்படங்களின் சீட்டுகளை சலுகை விலையில் வழங்கிப் பொங்கல் பரிசாக வழங்கியது. ஜனவரி மாதம் 21ஆம் தேதி பாரதி கலை மன்றத் தலைவர் திருமதி.கங்காமலர் சிவப்பிரகாசு அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டின் செயற்குழு குத்து விளக்கேற்றி விழாவினைத் துவக்கி வைத்தனர்.

பாரதி கலை மன்றம், மன்றத்தின் மூத்த தலைவர். திரு.சாம் கண்ணப்பன் அவர்கள் மற்றும் முன்னாள் தலைவர்கள் அனைவரையும் கௌரவித்தது. பாரதி கலை மன்ற பொங்கல் விழாவினைச் சிறப்பிக்க, மக்கள் மத்தியில் புகழ்பெற்ற நடிகர், வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளர் மற்றும் பலகுரல் மன்னன், திரு.படவா கோபி அவர்கள், மனைவி திருமதி.ஹரிதா கோபி அவர்களுடன் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். திரு.படவா கோபி அவர்களை வரவேற்க, ஹூஸ்டன் மாநகரில் பறை இசை வகுப்பு நடத்தி வரும் திரு. தங்கராஜ் பேச்சியப்பன் மற்றும் செல்வன்.சஞ்சிவ் தங்கராஜ் அவர்கள் தனது குழுவினருடன் பறை இசையால் வரவேற்றார். அரங்கம் முழுதும் பறை ஒலி நிறைந்து சிறப்பு விருந்தினரையும், மக்களையும் மகிழ்வித்தது. ஹூஸ்டன் குழந்தைகள் ஒவ்வொருவரும் தங்கள் கலைத்திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களுக்கு விருந்து படைத்தனர்.

திரு.படவா கோபி அவர்கள் தனது பலகுரல் திறமையால் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டார். அவரது மனைவி திருமதி. ஹரிதா கோபி அவர்கள் திரை இசை பாடல்கள் பாடி அவையினரின் உள்ளங்களைக் கவர்ந்தார். அவையினர் அனைவருக்கும் இந்தியன் சம்மர் உணவகத்திலிருந்து இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொங்கல் விழா அரங்கை டெக்கர் ஒன் நிறுவனம் தத்ரூபமாக மிக அழகாக வடிவமைத்திருந்தது.

திரு.திரு.ஆறுமுகம் ( Golden Rays Photo Photography ) இந்நிகழ்ச்சியின் நினைவலைகலைத் தனது புகைப்படங்களின் மூலம் அருமையாக பதிவு செய்திருந்தமைக்கு பாரதி கலை மன்றம் தனது நன்றிகளை உரித்தாக்குகிறது. அரங்கத்தின் நுழைவாயிலை பொங்கல் விழாவினை எடுத்துக்காட்டும் வகையில் பிளாஸம் (Blosssom) நிறுவனம் மிக அழகாக அலங்கரித்தமைக்கு பாரதி கலை மன்றத்தின் நன்றிகள். பொங்கல் பரிசாக “ஜரி வேர்ல்ட்” உரிமையாளர் திருமதி.குழலி ஆற்காட் அவர்கள் குலுக்கல் முறையில் இருவருக்கு பட்டுப்புடவைகளைப் பரிசாக வழங்கினார். பாரதி கலை மன்ற பொங்கல் விழா திருமதி.சுபா கண்ணன் அவர்களின் நன்றியுரையுடன் இனிதே நிறைவு பெற்றது.






Scanned with CamScanner

தமிழ்ப்புத்தாண்டு நம் முன்னே...
சுபகிருது சோபகிருதாய்.
நாம் கொண்டாட
இன்னுமொரு வருடம்!

பகை விலகி
பல்சுவை பெருக்கி
கைக்கோர்த்து நடக்க
இன்னுமொரு வருடம்!

சோர்வு நீக்கி
சோகம் தவிர்க்க
சோபகிருதாய்
இன்னுமொரு வருடம்!

மங்களம் எங்கும் பெருக
வாழ்வை வளமாக்க
வெளியே செல்ல வேண்டாம்...
வெளிச்சம் வெளியே இல்லை!
உன்னுள்ளே!! - என உணர்த்த
இன்னுமொரு வருடம்!

ஆரோக்கியமும் மகிழ்ச்சியும்
செல்வவளமும்
தங்கள் குடும்பத்தில்
இரட்டிப்பாய் பெருகட்டும்
தாய்த்தமிழ் உறவுகளே!!



கௌசல்யா சங்கர் நம்பி



Scanned with CamScanner

## எல்லைக் கோடுகள்

போரில்லா
நல்லுலகமென
எள்முனையளவு
எல்லோரும்..
நல்லெண்ணம் ..
கொள்வதினால்
சில்லறைகள்
சிதறிப்போம்.
கதறிடும்
இதயங்கள்
வீரர்தம்
வீட்டாரென்ற
நிலையும்
கலையும்..
மேகங்களாக..

ஆகட்டும்
அதற்கான..
இதயபூர்வ
இறைஞ்சல்கள்..

துன்பமான...
எல்லைக்கோடுகளை
இல்லையென
ஆக்குவோம்..
வரைபடத்தின்..
கறையான
வரிகளை..
சரியாக..
வெளியேற்றுவோம்..
துளிர்க்கட்டும்..
மானிடம்...
ஏனிந்த ..
தாமதம்....

## அவளும் வாசுகி தான்

வள்ளுவர் குரல் வாசலில்....
சில்லென சேந்திய நீரை ..
அள்ளியெடுக்க
அவகாசமில்லை ..
மெல்லியள் வாசுகிக்கு..
“நில்”லென நீரை பாதியில்
நிறுத்தி
“செல்” லென மனதை விரட்டி..
வள்ளுவர் நோக்கி விரைந்தாள்..

இல்லந்தோறும் இத்தகு காட்சி..
சொல்லவே வேண்டாம்
இருக்குது நாட்டில்
கிணற்று நீர் கையில்
கரண்டியாக மாறி ..
தினமும் அடுப்படிக்கும்..
அடுத்த அறைக்கும் அவள்
எடுக்கும் ஓட்டங்கள் என்றும்
சென்சுரி

திடுக்கென உறைவாள்
சிலநொடி..
தடுக்கும் ஃபயர் அலார்ம்
சத்தத்தில்
அடுப்பிலிட்ட அடிசில் கருகி
முறைக்கும்.
மிடுக்கு உடையில் மேலாண்மை
பார்த்தாலும்
அடுக்களை அவள் அகம் என்று
வந்தால் அவளும் வாசுகி தான்
இந்தக் கதை உணர்தல்
வேண்டும்
இந்நாள் வள்ளுவப்
பெருந்தகைகள்....



ராஜி வாஞ்சி



Scanned with CamScanner

Bharathi Kalai Manram
பாரதி கலை மன்றம்

## Bharathi Kalai Manram (BKM) would like to THANK Houston Arts Alliance (HAA) for their support!



**நல்கை ஈன்ற நன்கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கும் பாரதி கலை மன்றத்தின் மனமார்ந்த நன்றிகள்!!**



Scanned with CamScanner

# கீழடி அகழாய்வு

- கீழடி தொல்லியல் களம் என்பது இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் தமிழ் நாடு தொல்லியல் துறையால் செயல்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும்.
- இந்த அகழ்வாய்வு மையம் தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12 கி.மீ தொலைவில், சிவகங்கை மாவட்டத்தில், கீழடி கிராமத்தின் பள்ளிச்சந்தை திடல் மேட்டுப்பகுதியில் உள்ளது.
- இத்தொல்லியல் களம் சுமார் கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற்கும், கி.மு. 5 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திற்குரியது எனக் கணித்துள்ளனர்.
- கிட்டத்தட்ட 48 சதுரக் குழிகள் வெட்டப்பட்டு உறைக்கிணறுகள். செங்கற் சுவர்கள், கூரை ஓடுகள், மண்பாண்டங்கள், மிளிர்கல் அணிகலன்கள், எலும்புக் கருவிகள், இரும்பு வேல், தமிழ்ப் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானையோடுகள் பல்வேறு தொல்லெச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- கீழடியில் 10 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஒரு வளர்ச்சியடைந்த நகரமாக இது திகழ்ந்ததற்கு இது வலுவான சான்றாக உள்ளது. "சங்க காலத்தில் கட்டிடங்களே இல்லை என்ற கூற்றைஇந்த அகழ்வாய்வு மாற்றியமைத்துள்ளது".
- நீர் வழங்கலும், கழிவுநீர் அகற்றலும் நாகரிக வளர்ச்சியின் முக்கிய மைல்கல்களாக் கருதப்படுவன. கீழடியில் "சுடுமண் குழாய் மூலம் உருவாக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய் வசதியுடன் கட்டிடங்கள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளன.
- ஆதன், உதிரன், திசன் போன்ற தனிநபர்களின் பெயர்களைக் குறிப்பிடும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண்பாண்ட ஓடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன..

https://casualwalker.com/keeladi-excavation-archaeological-exhibition-chennai-the-urban-settlement-of-sangam-age-on-the-banks-of-river-vaigai/

Scanned with CamScanner

Established 1974



நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்.. .

Scanned with CamScanner